விலை: 50.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

Western Union WU
MoneyGram
Ria
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...

SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 05 வெள்ளிக்கிழமை (20.11.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 337

### வடக்கு, கிழக்கிலுள்ள பொலிஸ் நிலையங்கள்
# மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதை தடை செய்யக்கோரி நீதிமன்றங்களில் மனு
## உயர்மட்ட உத்தரவு என கூறப்படுகின்றது

(யாழ்ப்பாணம்)

வடக்கு,கிழக்கிலுள்ள பொலிஸ் நிலையங்கள் தமது எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் மாவீரர் நாளை அனுஷ்டிப்பதை தடை செய்யக்கோரி நீதிமன்றங்களில் மனுத்தாக்கல் செய்துள்ளன.

உயர்மட்டத்தின் உத்தரவையடுத்து பொலிஸ் நிலையங்களால் மேற்படி மனுத் தாக்கல்கள் செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

பருத்தித்துறை, கோப்பாய், யாழ்ப்பாணம், மல்லாகம், சாவகச்சேரி பொலிஸ் பிரிவுகளில் மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதை தடை செய்யக்கோரி நீதிமன்றத்தில் மனுக்கள் செய்யப்பட்டுள்ளன.

மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதை தடை செய்யக்கோரி வடக்கு, கிழக்கிலுள்ள பொலிஸ் நிலையங்களிற்கு உயர்மட்ட உத்தரவிடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதையடுத்து, இந்த பொலிஸ் நிலையங்களின் சார்பில் நீதிமன்றங்களில் மனுத் தாக்கல்கள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில் யாழ்ப்பாணம், கோப்பாய், மல்லாகம், சாவகச்சேரி பொலிஸார் தமது பொலிஸ் பிரிவுக்குள் மாவீரர் தினத்தை அனுட்டிக்க தடைகோரி யாழ்.நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

பருத்தித்துறை பொலிஸார், தமது எல்லைக்குள் மாவீரர் தினத்தை அனுட்டிக்க எம்.கே. சிவாஜிலிங்கம் உள்ளிட்ட சிலருக்கு தடைவிதிக்க கோரி, பருத்தித்துறை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளனர். (ம-3)

### எதிர்வரும் 23ஆம் திகதி பாடசாலைகள் மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

மேல் மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தல் பகுதிகளை தவிர்ந்த ஏனைய பகுதிகளில் உள்ள பாடசாலைகளை இம்மாதம் ▷19

நீங்கள் வேலை தேடுபவரா?
வேலைவாய்ப்பு
இன்றைய வலம்புரி இல்

# மாவீரர் நினைவேந்தலுக்கு மன்னார், வவுனியாவில் தடை
## பயங்கரவாத தடைச்சட்டம், கொரோனாவை காரணம் காட்டி நீதிமன்றங்கள் உத்தரவு

(வவுனியா)

வவுனியா மற்றும் மன்னாரில் மாவீரர் தின நிகழ்வுகளை நடத்த வவுனியா மற்றும் மன்னார் நீதிமன்றங்கள் இரண்டு தடையுத்தரவுகளைப் பிறப்பித்துள்ளன.

பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் கொரோனா வைரஸ் தொற்று ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி வவுனியா மற்றும் மன்னார் பொலிஸாரினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய நீதிமன்றம் இந்த தடையுத்தரவை பிறப்பித்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

### 4 பேர் உயிரிழப்பு
#### நேற்றும் +437 தொற்றாளர்கள்

(கொழும்பு)

நாட்டில் கோவிட் ▷19

### மதமாற்ற பதாகைகள் யாழில் அகற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வீதியோரங்களிலுள்ள ▷19

## உயிரிழந்த கைதிக்கும் தப்பியோடிய கைதிக்கும்
### கொரோனா தொற்று உறுதி

(கொழும்பு)

கணடி - போகம்பரை பழைய சிறைச்சாலையில், கடந்த இரு நாட்களுக்குமுன் தப்பியோட முயன்றபோது உயிரிழந்த கைதிக்கும் ▷19

### வேலையற்றோருக்கு வேலையொன்றை பெற்றுக் கொடுக்க அரசு புதிய முயற்சி

(கொழும்பு)

வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளிற்கு வேலையொன்றை பெற்றுக் கொடுக்கும் புதிய ▷19

### பண்ணாகம் விசுவத்தனையில்
## 16 பவுண் நகை திருட்டு
### மாகாண சபை முன்னாள் உறுப்பினர் வீட்டில் பட்டப்பகலில் சம்பவம்

(சித்தன்கேணி)

வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவரின் வீடு உடைக்கப்பட்டு 16 பவுண் நகை திருடப்பட்டுள்ளது. ▷19

### யாழில் பரிசோதனை
## 10 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ். பரிசோதனைக் கூடங்களில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளில் ▷19

#### தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை
### தேசிய ரீதியில் தமிழ்மொழி மூலத்தில் யாழ்ப்பாணக் கல்வி வலயம் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் வெளியாகிய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2020இன் பெறுபேறுகளின் அடிப்படையில், யாழ்ப்பாணக் கல்வி வலயம் தமிழ் மொழி மூலத்தில் தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளது.

யாழ்ப்பாண கல்வி வலயத்துக்குட்பட்ட 758 மாணவர்கள் வெட்டுப்புள் ▷19

## விபத்துக்குள்ளான 6 வயது மாணவி உயிரிழப்பு
### கிளிநொச்சியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

விபத்துக்குள்ளான பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் உதயநகர், கிளிநொச்சியைச் சேர்ந்த நந்தகுமார் நிதிலா (வயது-6) என்ற பாடசாலை ▷19

# வருமானத்தை ஈட்டிக் கொள்வதற்கு அரசிடம் எந்த வழிமுறைகளும் இல்லை

## சபையில் விஜித ஹேரத் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கடன் பெறுவதும் பணத்தை அச்சிடுவது மாத்திரமே வரவு செலவு திட்டத்தில் பிரேரிக்கப்பட்டுள்ளது. மாறாக வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்கான எந்த வழிமுறைகளும் அதில் இல்லை.

அரசாங்கத்தின் இயலாமையே இதற்கு காரணமாகும் என தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் விஜித ஹேரத் குற்றம் சுமத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு - செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

நல்லாட்சி அரசாங்க காலத்தில் 6 ட்ரில்லியன் ரூபா கடன்பெற்று நாட்டை கடன் பொறிக்குள் தள்ளியதாக அரசாங்க தரப்பினர் குற்றம் சாட்டியிருந்தனர்.

அதே நிலையில்தான் அரசாங்கம் தற்போது இரண்டு வருடத்தில் 5 ட்ரில்லியன் கடன் பெற்றுக்கொள்கின்றது.

2021 நிறைவடையும் போது நாட்டின் மொத்த கடன் தொகை 18 ட்ரில்லியனாகின்றது. ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக்கு வந்தபோது இந்த அரசாங்கம் கடனை உயர்த்தியுள்ளதாக குற்றம் சாட்டி, அதனை அடைப்பதற்கு மேலும் கடன் பெற்றது.

தற்போது இந்த அரசாங்கமும் ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியை குற்றம்சாட்டி மேலும் கடன் பெற்றுள்ளது.

அதனால் அரசாங்கத்தின் வரவு செலவு திட்டத்தில் கடன் பெறுவதும் பணத்தை அச்சிடுவதும் மாத்திரே பிரேரிக்கப்பட்டிருக்கின்றது.

வருமானத்தை ஈட்டிக்கொள்ளஎந்தப்பிரேரணையும்இல்லை. அதனால்தான் இந்த அரசாங்கம் தோல்வி என தெரிவிக்கின்றோம். கடன் பெறுவதும் பணம் அச்சிடுவதும் அரசாங்கம் ஒன்றின் இயலாமையின் போதாகும். இந்த அரசாங்கத்தின் இயலாமை ஒருவருடத்திலே தெரியவந்திருக்கின்றது.

அத்துடன் கடந்த அரசாங்கம் அரச சொத்துக்களை விற்றதாக குற்றம் சாட்டியும் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அவற்றை மீண்டும் மீட்டெடுப்பதாகவும் கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கம், முதலாவது அமைச்சரவையிலேயே சங்கிரில்லாவுக்கு பக்கத்தில் இருக்கும் 3 அரை ஏக்கர் காணியை சிங்கப்பூர் கம்பனி ஒன்றுக்கு விற்றுள்ளது.

அதனால் கடந்த அரசாங்கம் போன்றே இவர்களும் நாட்டின் சொத்துக்களை விற்றும் கடன் பெற்றும் பணம் அச்சிட்டுமே நாட்டை கொண்டுசெல்ல முயற்சிக்கின்றாகளே தவிர, நாட்டுக்கு வருமானத்தை ஈட்டக்கூடிய எந்த வேலைத் திட்டமும் அரசாங்கத்திடம் இல்லை என்றார். (ம-3)

# தீவகத்தில் கால்நடைகளை கட்டுப்படுத்தும் பணி மும்முரம்

(வேலணை)

தீவகத்தில் உள்ள கட்டாக் காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எனவே கால்நடை வளர்ப்போர் தங்களுக்கு உரித்தான கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு தீவகத்தைச் சேர்ந்த கமக்கார அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (ம-03)

# யாழ். ஒட்டுமட சந்தியில் 3 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து

## 3 பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம் ஒட்டுமட சந்தியில் 3 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் விபத்து சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

நேற்று இடம்பெற்ற இவ் விபத்து சம்பவத்தில் 3 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். நகரிலிருந்து ஆறு கால்மடம் நோக்கி பயணித்த ஆட்டோ மீது குறித்த வீதி ஊடாக யாழ். நகரம் நோக்கி பயணித்த பட்டா வாகனம் கட்டுப்பாட்டை இழந்து மோதியதுடன், அதே திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள் மீதும் மோதி விபத்துக்குள்ளாகியிருக்கின்றது.

படுகாயமடைந்தவர்களைவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3)


# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## 2021 ஆம் ஆண்டிற்கான 2 ஆவது மீள் கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மரக்கறிச் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக் கடைகள் என்பனவற்றை 2021.01.01ஆம் திகதி தொடக்கம் 2021.12.31ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப் பத்திரம் வழங்கும் காலம்** - 20.11.2020 - 03.12.2020 பி.ப 2.00 மணி வரை
**கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி** - 04.12.2020 பி.ப 1.30 மணி வரை
**கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி** - 04.12.2020 பி.ப 2.00 மணிக்கு
**கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம்** - வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம்.

| தொ இ. | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT,NBT தவிர) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 1 | கருவாட்டுக் கடை இல 03 | 750.00 | 7,500.00 | 34,300.00 | 250.00 |
| 2 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7,500.00 | 38,206.00 | 250.00 |
| 3 | கோழிக் கடை இல 06 | 1,000.00 | 10,000.00 | 179,300.00 | 250.00 |
| 4 | பொது மலசலகூடம் | 750.00 | 7,500.00 | 61,000.00 | |
| | உடுவில் உப அலுவலகம் | | | | |
| 1 | மல்வம் சந்தை | 750.00 | 2,000.00 | 50,000.00 | |
| | ஏழாலை உப அலுவலகம் | | | | |
| | ஏழாலை மயிலங்காடு கோழிக் கடை | 750.00 | 7,500.00 | 155,000.00 | 250.00 |
| 1 | ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7,500.00 | 40,500.00 | 250.00 |

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை 2020.10.12ஆம் திகதிய வலம்புரி, உதயன், தினக்குரல் பத்திரிகைகளிலும் எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

க.தர்ஷன்
தவிசாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

(C-731) 20.11.2020


# அரச, தனியார் ஊழியர்கள் போக்குவரத்து சேவையைப்பெற புதிய வசதி அறிமுகம்

(கொழும்பு)

கொரோனா அபாயம் நிலவும் சூழலில் அரச, தனியார் நிறுவனங்களிற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு புதிய வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது.

அந்தந்த நிறுவனங்களின் ஊழியர்களின் பிரயாணத்திற்கு பேருந்து வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுமென அறிவித்துள்ளது.

போக்குவரத்து சேவை தேவைப்படும் நிறுவனங்கள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தைப் பார்வையிடுவதன் மூலம் விண்ணப்பத்தைப் பெறலாம்.

இதேபோல, இந்த திட்டத்தில் இணைந்து சேவையில் ஈடுபட விரும்பும் பஸ் உரிமையாளர்கள் தம்மை பதிவு செய்ய 1955 என்ற எண்ணை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ம-03)

# நல்லூர் பிரதேச சபையின் பட்ஜெட் நேற்று தோற்கடிப்பு

## முன்னணி, ஈ.பி.டி.பி. கூட்டணி இணைந்து எதிர்த்து வாக்களிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையின் வரவு - செலவு திட்டம் நேற்று தோற்கடிக்கப்பட்டுள்ளது.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆளுகையிலுள்ள 20 உறுப்பினர்களை கொண்ட நல்லூர் பிரதேச சபையில் 11 உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்தனர். 8 உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்து வாக்களித்தனர். ஒருவர் நடுநிலை வகித்தார்.

அதன் அடிப்படையில் நல்லூர் பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டம் 3 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் 6 பேர் மற்றும் தமிழ் தேசிய பசுமை இயக்கம் (மாம்பழம் சுயேட்சை குழு) இருவர் ஆதரவாக வாக்களித்தனர்.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சி உறுப்பினர்கள் நால்வர், தமிழ் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் ஐந்து பேர் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர் ஒருவர் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஒருவர் என 11 பேர் எதிர்த்து வாக்களித்தனர். (ம-03,18)

# இலங்கையின் இறக்குமதித் தடையால் வெளிநாட்டு முதலீட்டில் பாரிய தாக்கம்

## ஐரோ.ஒன்றியம் சுட்டிக்காட்டு

**(கொழும்பு)**

**வர்த்தகம் என்பது ஒருவழித் தடமல்ல. தற்போது இலங்கையில் காணப்படும் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் காரணமாக இலங்கை மற்றும் ஐரோப்பிய வியாபாரங்களில் எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், வெளிநாட்டு நேரடி முதலீட்டிலும் தாக்கத்தை ஏற் படுத்தியுள்ளது என ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

இது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழு மற்றும் பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, நெதர்லாந்து மற்றும் ருமேனிய தூதரகங்கள் இணைந்து நேற்று வியாழக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கொவிட்-19 தொற்றுப் பரவல் காரணமாக பெருமளவு சவால்கள் உருவெடுக்கும் நிலையில், கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அதன் அங்கத்துவ நாடுகளின் தூதரக உயரதிகாரிகள் உயர்மட்ட தொடர் சந்திப்புகளை முன்னெடுத்திருந்ததுடன், இதில் இலங்கையின் வெளியுறவுகள் அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவுடனான சந்திப்பும் அடங்கியிருந்தது.

இந்த சந்தர்ப்பத்தில், கடந்த 25 வருட காலப் பகுதியில் இலங்கைக்கு பரஸ்பர உதவிகளுக்கு மேலதிகமாக, ஒரு பில்லியன் யூரோக்களுக்கு அதிகமான நன்கொடை உதவிகளை வழங்கி, இலங்கையின் நம்பகமான பங்காளராக நாம் திகழ்கின்றமையை வலியுறுத்தியிருந்தோம்.

எமது அபிவிருத்திக்கான பங்காண்மைக்கு மேலாக, இலங்கையின் முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதார பங்காளராக ஐரோப்பிய ஒன்றியம் திகழ்வதை நாம் நினைவூட்டியிருந்தோம். எனவே எமது பகிரப்பட்ட சர்வதேச அர்ப்பணிப்புகள் மற்றும் கடப்பாடுகளின் பிரகாரம் இலங்கையுடன் ஆழமான ஈடுபாட்டை தொடர்ந்து முன்னெடுக்க நாம் எதிர்பார்க்கின்றோம் எனக் குறிப்பிட்டுள்ளது. (ஜ-4)

# போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வரவு- செலவுத்திட்டத்தில் ஏதுமில்லை

(குருமன்காடு)

அரசாங்கத்தின் வரவு-செலவுத்திட்டத்தில் யுத்தத்தால் பாதிப்படைந்த வடக்கு - கிழக்கு மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான விசேட நிதி ஒதுக்கப்படவில்லை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் பொதுச் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன் சுட்டிக்காட்டியுள்ளார்.



வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது சிங்கள பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் உள்ள இந்த அரசாங்கம் சீனா, அமெரிக்கா, இந்தியா அரசாங்கத்தின் பூகோள அரசியலுக்குள் சிக்கியுள்ள நிலையில் இந்தியா ஆகியவற்றின் ஈழத் தமிழ் மக்களின் நிரந்தர அரசியல் தீர்வுக்கு காத்திரமான ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்.

அதேபோல், தமிழ் மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய தமிழ் தேசியக் கட்சிகள் மத்தியில் அரசியல் விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால் பலமான ஐக்கிய முன்னணியை கட்டியெழுப்புவதன் மூலம் இந்தியாவுடனும், சர்வதேச நாடுகளுடனும் தமிழ் மக்களுக்கான பலமான இராஜ தந்திர கட்டமைப்பை கட்டியெ ழுப்ப முடியும்.

யுத்தத்திற்கு பின் கொண்டு வரப்பட்ட நல்லாட்சி அரசாங்கத்தின் வரவு- செலவுத் திட்டமும் தற்போதைய அரசாங்கத்தின் வரவு- செலவுத் திட்டமும் வடக்கு -கிழக்கு பகுதியில் யுத்தத்தால் அழிக்கப்பட்ட மக்களுக்கான விசேட நிதி ஒதுக்கீட்டை செய்யவில்லை. மாறாக யுத்த காலத்தைப் போன்று இரட்டிப்பான நிதி பாதுகாப்பு நிதியாக ஒதுக்கப்பட்டுள்ளது. யுத்தத்தால் பாதிப்படைந்த மக்களின் சொத்த ழிவு, உயிரிழப்பு என்பவற்றுக்கு எந்தவிதமான நிதியும் ஒதுக்கப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-250)

# பிணைமுறி மோசடி விவகாரம்; விசேட நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

## நீதியமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியில் நடந்த நிதி மோசடியுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக விசேட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக நீதிய்மைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர், இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி திருடர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படும் எனக் கூறிய போதிலும் இன்னும் வழக்கு தாக்கல் செய்யவில்லை என எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல பாராளுமன்றில் தெரிவித்திருந்தார். இதற்கு பதிலளிக்கும் போது நீதியமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மத்திய வங்கியின் திருடர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள போதிலும் பிரதான சந்தேகநபரான அர்ஜுன் மகேந்திரனுக்கு நீதிமன்ற அறிவிப்பாணையை வழங்க முடியாதுள்ளது என்பதால், வழக்கை முன்னெடுத்துச் செல்ல முடியாமல் இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# குடியால் வந்த வினை தந்தையை தாக்கிய தனயன்

(தருமபுரம்)

மகனின் மோட்டார் சைக்கிளை அடகுவைத்து மது அருந்திய தந்தையை மகன் தாக்கிய சம்பவம் ஒன்று தருமபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் மகன் வேலைக்குச் சென்ற சமயம் தந்தை மகனின் மோட்டார் சைக்கிளை 12 ஆயிரம் ரூபாவிற்கு அடைகு வைத்து மதுபானம்வாங்கி அருந்தியுள்ளார்.

வேலை முடிந்து விடு திரும்பிய மகன் தனது மோட்டார் சைக்கிளைக் காணாது அதிர்ந்து போய் தேடிவந்த நிலையில் 12 ஆயிரம்ரூபாவிற்கு அடகுவைத்த விடயம் தெரியவந்தது.

அதையடுத்து மகன் தந்தையிடம் கேட்டபோது தந்தை பதில் எதுவும் கூறாத காரணத்தினால் கோபமடைந்த மகன் தந்தையை கம்பியால் தாக்கியுள்ளார்.

மகனின் தாக்குதலில் பலத்த காயமடைந்த தந்தையை அயலவர்கள் தருமபுரம் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

அதன்பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

தந்தையை தாக்கிய மகன் இரும்பு கம்பியுடன் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக விசாரணைகளை தருமபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவித்தனர். (5-4-316)

# வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றப்படும்

## சாகர திட்டவட்டம்

(கொழும்பு)

2021 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்படும் என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

2021 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் வெற்றிகரமாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எதிர்த்தரப்பினரது ஆதரவு இல்லாமல் வரவு-செலவுத்திட்டத்தை பெரும்பான்மை ஆதரவுடன்நிறைவேற்றிக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# கொட்டப்படும் குப்பைகள்; பறவைகள், மீனவர்கள் பாதிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதான வீதியை அண்டிய இரட்டை வாய்க்கால் பகுதியில் இருக்கின்ற நந்திக்கடல் களப்பில் மீனவர்கள் தங்களுடைய வாழ்வாதாரத்துக்காக மீன்பிடித்து வருகின்றனர்.

குறித்த களப்பு பகுதியில் வீதியின் ஓரத்தில் கொட்டப்படுகின்ற குப்பைகளால் பல அசௌகரியங்கள் ஏற்படுவதாக மீனவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

குறித்த களப்பை நம்பி மீன்பிடித் தொழிலை நம்பி வாழ்வை கொண்டு செல்கின்ற மீனவர்களுக்கு இதனூடாக பல்வேறு ஆபத்துக்கள் ஏற்படக்கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறித்த பகுதிகளில் குப்பைகள் கொட்டப்படுவதை தடை செய்து குறித்த களப்பு பகுதியில் இருக்கின்ற குப்பைகளை அகற்றி தங்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவுவதோடு குறித்த இயற்கை ஒதுக்கிடத்துக்கு வருடா வருடம் வருகின்ற பறவைகளை பாதுகாப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனமேலும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஜ-4-281)

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்

# 2021 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல்

சாவகச்சேரி நகராட்சி மன்றமானது 2021 ஆம் ஆண்டிற்கான கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வழங்கு பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்தகாரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்களை கோருகின்றது. விண்ணப்பப்படிவங்களை எமது அலுவலகத்தில் அலுவலக நாட்களில் மு.ப 8:30 தொடக்கம் பி.ப 3:00 வரை பதிவுக்கட்டணம் ரூ.1000.00 செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பங்கள் யாவும் 25.12.2020 ஆம் திகதி வரையும் எம்மால் ஏற்றுக் கொள்ளப்படும்.

**தொகுதிகள்**

தொகுதி "A" - பொருட்கள் வழங்குதல் (பொது)
தொகுதி "B" - சேவைகள் / வேலை
தொகுதி "C" - வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும்

பொருட்கள்

| தொகுதி இல | பொருட்கள் வழங்குதல் (பொது) |
|---|---|
| A-01 | காகிதாதிகள் எழுது பொருட்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A-02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம் /இரும்பு/ உருக்கு/ ஏனையவை) |
| A-03 | கணணிகள், கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோணர்கள் றிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள் |
| A-04 | ஜன்னல், திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணி வகைகள் |
| A-05 | குளியலறைப் பொருத்திகள், மாபிள் கல் வகைகள் நீர்வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடு இணைந்த பொருட்கள் |
| A-06 | கட்டட இரும்புப் பொருட்கள், பெயின்ற், வாணிஸ் மற்றும் சகல ஹாட்வெயார் பொருட்கள் |
| A-07 | மின்சாரப் பொருட்கள், அதன் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்பிற்கான பொருட்கள், மின் மோட்டர்கள், மின்சார பல்புகள், மின்விசிறிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A-08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை |
| A-09 | அழுக்கு நீக்கும் பவுடர்கள், விம், ஹாபிக் மற்றும் கிருமிநாசினிகள் ஏனையவை |
| A-10 | வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள், ரயர், ரியூப் மற்றும் ஏனையவை |
| A-11 | தோலுற்பத்திப் பொருட்கள், கம் பூட்ஸ், சப்பாத்துக்கள் |
| A-12 | எரிபொருட்கள் , உராய்வு நீக்கிகள் |
| A-13 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A-14 | இரும்பு பொருட்கள் |
| A-15 | கற்கள் மணல் வகைகள் |
| A-16 | தீராந்திகள் , பலகைகள், சட்டங்கள் |
| A-17 | பனை மரங்கள், சலாகைகள் |
| A-18 | பாதணிகள், தோற்பொருட்கள் |
| A-19 | அலங்காரப் பொருட்கள் |
| A-20 | இலத்திரனியல் சாதனங்கள், துணைப்பொருட்கள் |

| தொகுதி இல | வேலைகள் விபரம் |
|---|---|
| B-01 | ஒலியமைப்பு சாதனங்களும் அதனோடு தொடர்புடைய உபகரணங்களும் தொழில்நுட்ப ஆலோசனையும் வழங்குதல் |
| B-02 | உருக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம் |
| B -03 | மின் உபகரணங்கள் திருத்தம், சேவிஸ் செய்தல் ( காற்றுக் குளிராக்கி, நிழற்படப்பிரதி இயந்திரம், கணனி விரல் அடையாளத்தைப் பதிவு செய்யும் இயந்திரம்.) |
| B-04 | மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின் விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதலும் மீள முறுக்குதலும். |
| B-05 | பதிப்பக வேலை சகலவித படிவங்கள், ஏனையவை. |
| B-06 | கட்டட அமைப்பும் திருத்த வேலையும் |
| B-07 | உள்ளக தொலைபேசி இணைப்பும் பராமரித்தலும் |
| B-08 | இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல் |
| B-09 | கோலவுடை தைத்தல், திரைச்சீலை |
| B-10 | இறப்பர் முத்திரை வகைகள் தயாரித்து வழங்குதல் |

**நியந்தனைகள்**

1. வழங்கல்கள்/ சேவைகள் 2021ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியாகும்.
2. திருப்திகரமற்ற வழங்கல்கள்/சேவைகள் நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கு உண்டு.
3. பதிவிற்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்கள் எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கு உண்டு. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொகுதி இல | வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும் |
|---|---|
| C-01 | சகல விதமான வாகனதிருத்தமும், மின்சார வேலை, வாகன உட்பக்கம், சீற் என்பவற்றுக்கான குசன் வேலை. |
| C-02 | சகலவிதமான வாகன சுத்திகரிப்பு |
| C-03 | வாகனங்களுக்கு ரியூப் ஒட்டுதல், உலோக வேலைகள். |

**இ.சிவமங்கை ,**
**தவிசாளர்,**
**நகராட்சி மன்றம்,**
**சாவகச்சேரி.**

(சி-728)

# இன்னும் நான்கு மாதங்களில் கொரோனா ஒழிந்து விடும்

(கொழும்பு)

இன்னும் நான்கு மாதங்களில் கொரோனா வைரஸ் தொற்று நோய் நாட்டில் இருந்து ஒழிக்கப்பட்டு விடும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தஸநாயக்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சியினருக்கு இன்னும் சில மாதங்களில் கொரோனாத் தொற்று நோய் என்ற போராட்ட கோஷமும் இல்லாமல் போய்விடும் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

# தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் சில பகுதிகள் விடுவிக்கப்படும்



(கொழும்பு)

கொரோனா வைரஸ் பாதிப்பு அதிகம் உள்ள பகுதிகள் தவிர்ந்து தனிமைப்படுத்தப்பட்ட ஏனைய பிரதேசங்களை அடுத்த வாரமளவில் விடுவிப்பதற்கு அவதானம் செலுத்தப்பட்டு வருவதாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இந்தக் காலப்பகுதியில் விடுவிப்பதா இல்லையா என்பது தொடர்பிலான காரணிகளை ஆராய்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் சட்டம் நாட்டில் எங்கும் அமுலாக்கப்படவில்லை என்றும் தற்போது கம்பஹாவில் 7 பொலிஸ் பிரிவுகளும் கொழும்பு மாவட்டத்தில் 17 பொலிஸ் பிரிவுகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.(ஜ-4)

# வரவு - செலவுத்திட்ட விவாதத்தின் போது பிரசன்னமான ஜனாதிபதி



(கொழும்பு)

2021 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்ட விவாதத்திற்கு இடையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாராளுமன்றத்திற்கு சென்றிருந்தார்.

வரவு - செலவுத்திட்டம் மீதான இரண்டாம் வாசிப்பு விவாதம் நேற்று இரண்டாவது நாளாக இடம் பெற்றுக் கொண்டிருந்த வேளையிலே அவர் பாராளுமன்றம் சென்றுள்ளார். (ஜ-4)

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

கல்கிஸ்ஸ பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டார்.

கல்கிஸ்ஸ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெலிக்கட சந்தியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 9 மணியளவில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.(ஜ-4)

# தமிழினத்தின் அபிலாசைகளை உறுதிசெய்யுங்கள்

## சபையில் சிறீதரன் வலியுறுத்து



(கொழும்பு)

தமிழ்த் தேசிய இனத்தின் அபிலாசைகளை பூர்த்தி செய்யக் கூடிய தீர்வை முன்வையுங்கள். நாடு வளர்ச்சியை நோக்கிச் செல்லும் என தமிழ்தேசியக் கூட்டமைப்பின் பராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு-கிழக்கில் வாழும் தமிழர்களிடம் தாங்கள் ஓர் வேற்று நாட்டில் வாழும் உணர்வும் எண்ணமும் இருக்கிறது. காரணம் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்ட படையினர் அங்கு குவிக்கப்பட்டு அவர்களுடைய பிரசன்னத்தோடு அந்த மக்கள் அங்கு அடக்கப்பட்டுள்ளார்கள்.

சொந்த இடங்கள் இன்னமும் விடுவிக்கப்படாமல் உள்ளது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு இன்னமும் தீர்வில்லை.

சிறையிலே இருக்கின்ற கைதிகள் இன்றைக்கு கொரோனாவால் பாதிக்கப்படுகிறார்கள். தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க யாரும் தயார் இல்லை. இந்த நாட்டில் வாழும் தமிழர்கள் சரியான இலக்கோடும் நிம்மதியோடும் உண்மையான உரித்துக்களுடனும் வாழவேண்டும்.

தமிழ்த் தேசிய இனத்தின் அபிலாசைகளை பூர்த்தி செய்யக் கூடிய வகையில் அவர்களையும் இந்த நாட்டின் பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் உங்களுடைய ஒரு தீர்வை முன்வையுங்கள். அப்போதுதான் நாடு வளர்ச்சியை நோக்கிச் செல்ல முடியும்என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# நில நடுக்கத்தை ஆராய குழுநியமனம்

(கண்டி)

கண்டியில் சில பகுதியில் நேற்று முன்தினம் ஏற்பட்ட சிறியளவிலான நிலநடுக்கம் குறித்து ஆய்வு செய்ய புவியியலாளர்கள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

குறித்த நில அதிர்வு பல்லேகலையில் அமைந்துள்ள நிலநடுக்க கண்காணிப்பு மையத்தில் பதிவாகியமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# 29 பேருக்கு வலைவீச்சு

(கொழும்பு)

கொரோனா தொற்று காரணமாக வீதிகளில் பலர் விழுந்து உயிரிழப்பதாக போலித்தகவல்களை சமூக வலைத்தளங்களில் பரப்பிய, 29 பேரைத் தேடி வருவதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இந்த 29 பேரில் அவுஸ்திரேலியா மற்றும் ஜப்பானில் வசிக்கும் இருவரும் இலங்கையில் 27 பேரும் உள்ளமை தெரியவந்துள்ளதாகவும் இவர்களை கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்தார். (ஜ-4)

# பணிக்குத் திரும்பிய தாதியர்கள்

(பதுளை)

ஊவா மாகாண குடும்பநல சுகாதாரத் தாதியர்கள் கடந்த ஒன்றரை மாத காலமாக மேற்கொண்டிருந்த பணிப்பகிஷ்கரிப்புக்கள் நிறைவு பெற்று, பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்த 2 ஆயிரத்து 500 தாதியர்களும் தற்போது பணிக்குத்திரும்பியுள்ளனர்.

ஊவா மாகாணத்தில் மட்டும் இத்தாதியர்களுக்கு கடந்த ஏப்ரல் மாதம் முதல் வழங்கப்பட வேண்டிய போக்குவரத்து செலவுத் தொகை, அரசினால் வழங்க தீர்மானிக்கப்பட்ட கொரோனா தொற்று நீக்கும் கால கடமைகளுக்கான கொடுப்பனவுகள், ஊக்குவிப்பு உள்ளிட்ட ஏனைய கொடுப்பனவுகள் வழங்கப்படாமையைக் கண்டித்தே கடந்த ஒன்றரை மாத காலமாக இத்தாதியர்கள் பணிப்பகிஷ்கரிப்புகளில் ஈடுபட்டிருந்தனர். (ஜ-4)

# தொழிற்சாலைகளில் சுகாதாரக்குழு

(கொழும்பு)

நாட்டில் சகல தொழிற்சாலைகளிலும் சுகாதார குழுவொன்றை அமைக்க, தொழில் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவலையடுத்து, சுகாதார அமைச்சு விதித்துள்ள சுகாதார வழிகாட்டல்களை உரியமுறையில் கடைப்பிடிக்கும் வகையில், ஊழியர்களை வழிகாட்டுவதே இதன் பிரதான நோக்கமாகுமென, தொழில் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.

அத்துடன், சுகாதார வழிமுறைகளை மீறும் தொழிற்சாலைகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் இதனை கண்காணிக்க குழுவொன்றை அமைத்துள்ளதாக, அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)


1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 14.09.1941
இறப்பு: 02.11.2019

அமரர் கந்தவனம் தேவசிகாமணி



ஆலம் விழுதுகள் ஆயிரம் உறவுகள் கொண்டு
குடும்ப உறவுகள் வீழ்ந்து விடாதிருக்க
வேரென இருந்தீரே-ஐயா
மாயப் புயல் வடிவில் காலனவன் இன்னுயிர் பறிக்க
சோகத்தை தந்துவிட்டு சொல்லாமல் சென்றதென்ன
நல்வழிகள் காட்டி எம் குடும்பத்திற்கு ஒளி கொடுத்த தீபமே
ஓராண்டு போனாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் மனதை விட்டு நீங்காது
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திதி:20.11.2020

கல்லூரி வீதி, பருத்தித்துறை.
077 913 8996.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(c-716)

# தொழில் பயிற்சி கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)


இலங்கைதொழிற்பயிற்சிஅதிகார சபையானது யாழ்ப்பாண மாவட்டத்தில் முழு நேர மற்றும் பகுதிநேர தொழிற்பயிற்சிகற்கை நெறிகளைஎதிர்வரும் 2.01.2021 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

இக்கற்கைநெறிகள் யாழ்ப்பாணம், கைதடி, காரைநகர், சுன்னாகம், பண்டத்தரிப்பு, வல்வெட்டித்துறை ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெறவுள்ளன.

இக்கற்கை நெறிகளாவன, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், கணனி வன்பொருள் திருத்துநர், கணனி படவடிவமைப்பாளர், மரவேலை தொழில்நுட்பவியலாளர் (கட்டடம்), சிகையலங்கரிப்பவர், காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்), டீசல் இயந்திர திருத்துநர், தொழிற்சாலை மின்னிணைப்பாளர், மோட்டார் சைக்கிள் திருத்துநர், குளிர்சாதன உபகரணங்கள் மற்றும் வளிசீராக்கி திருத்துநர், பெண்கள், சிறுவர்களிற்கான ஆடை வடிவமைப்பாளர், வீட்டுமின்னிணைப்பாளர், அலுமினியம் பொருத்துநர், கட்டட நிர்மாண உதவியாளர், முன்பள்ளி ஆசிரியர், முதியோர் பராமரிப்பாளர், நீர்க்குழாய் பொருத்துநர், வெதுப்பாளர், அறை பராமரிப்பாளர், வரவேற்பாளர், சமையலாளர், உணவு மற்றும் குளிர்பானம் பரிமாறுபவர் என்பனவாகும்.

இவ்வனைத்து முழுநேர கற்கைநெறிகளும் தேசிய தொழில் தகைமை (NVQ - 3/4) சான்றிதழ்களுக்கான பயிற்சிகளாகும்.

இக்கற்கைநெறிகளை கற்க விரும்புவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் நேரிலோ அல்லது தபாலிலோ எதிர்வரும் 30.11.2020 ஆம் திகதிக்கு முன்னர் உதவிப்பணிப்பாளர், மாவட்ட அலுவலகம், 4 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் மேலதிக தகவல்களுக்கு 021 222 7949 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் யாழ்ப்பாணம் இலங்கை தொழில் பயிற்சி அதிகாரசபை உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (5)



இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கொரோனாத் தாக்கத்தினால் அல்லலுறும் உலக மக்களின் துயர் நீங்கி நலன்பெற வேண்டி மஹாம்ருத்யுஞ்ஜய ஹோமம் நேற்று வியாழக்கிழமை ஏழாலை சிறி கண்ணகை அம்பாள் ஆலயத்தில் நடைபெற்றது. குறித்த யாகம் ஆலயப் பிரதம குருக்கள் சிவஸ்ரீ நா.கிருஷ்ணலிங்கக் குருக்கள் தலைமையில் இடம்பெற்றது. (படம்:- ரவிசாந்)

# தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்-2020

**யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்**

க.தரணிகா- 191, மோ.சியாந் - 182, பி.பிரணுஷா - 177, சி. சானுகா - 168, ச. ஜர்மினா - 165, கா.தீப்தி - 161, பு.யருசன் - 161.

**யா/புத்தூர் மடிஹே பஞ்சசீக வித்தியாலயம்**

இ.சரண்யன் - 166.

**யா/வண்.ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயம்**

பி.லக்ஷிகா - 189.

**யா/மயிலிட்டி வடக்கு கலைமகள் ம.வி.**

ச.ருசான் - 164.

**யா/பெரியவிளான் றோ.க.த.க.பாடசாலை**

பு.பிரியந்தன் - 179, ஜெ. தனுஸ்கா - 178, நி.கிறிஸ்ரியா - 175, ல.லக்ஷிகன் - 175, தே.நிதுர்ஷனா - 174, க. திவா னுஜா - 163, ஆ.அனஸ்ரியன் - 162.

**யா/சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயம்**

நி.கஜானன்-168, சி.சகானா-166, தெ.தேனுகா -163, ம.அர்ச்சனா-163.

**யா / கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை**

ம.மகிர்ஷன்-195, ப.அக்சயன் -193, த.தட்சயன் - 192, ச.கர்ஷவர்தன்-192, ஜீ.சதுஷன்-192, இ.ராகவர்சினி-191, கு.லக்ஷியா- 191, ஜீ.லக்சிகா- 190, வ.பூர்வஜா -189, ஜெ.லக்ஸ்மன்காந்- 189, ச.மிதுனுஜன்-189, உ.ஆர்த்திகா- 188, சு.அபினயா-188, சி.ரதுஷ்-188, ம.ஆதர்சன்-188, சி.பிருத்வி-187, சி.மானஷ் வினி-187, சி.ரதுர்சனா-186, சோ.கபிஷன்-185, க.லோ கிஷா- 185, உ.சுவர்ணபவன்- 184, த.ஜஷ்மிலன்-184, சி.டினோஜா -184, பா.சிம்ம யன்-183, லோ.இவான்சலின் குலாஸ் -183, கி.திலத்ஷியா-183, மோ.கிஷோர்-182, ஜெசஷானா -182, சி.யனுஜன்-182, உ.நவினயன்- 182, சி.சிவாங்கி- 182, சி.கர்ஷினி- 182, ச.திவியன்-181, சு.அஷ் விதா- 181, ஜெ.அனுக்ஷயன்- 180, க.ரம்மியா-180, ப.அட்ஷயன்- 180, ச.லக்கியன்- 178, சி.அக்ஷரன்-178, ப.சுவஷ்திகன்-178, சி.நிஷாந்த்- 177, உ.இலக்கியன்-177, ந.அபிசேக்- 177, கி.கிஷானா - 176, த.மதுரா- 176, ப.பவிஷா-176, ரா.அக்ஷயா- 176, த.கேதுஷா -175, லி.கனுஷான்-175, ப.கோகுலபாசன்-174, ரா.வானவிகா -174, ந.கிருத்திகன்-174, க.ஜாதுவந்தி-174, சி.ஆதிரன்- 174, க.ஆதவன்-173, ச.அஜீஷ் -173, தி.கஜனன்- 173, உ.அக்ஷனா-172, ரா.அஷ்வின்-172, ப.வருண் -172, அ.கோபிகா- 172, வி.மதுஷன்-172, த.கேசாயினி-172, ச.சாம்ஜெர்ஷன் - 171, ம.அபினயா-171, ப.கம்சாயினி-171, உ.அஷ்வினி - 170, வ.கோபி கன்-170, ச. பவதாரணி-170, வி.தர்மிகா-170, மு.டனோஜன் -170, து.தாட் சஜினி -169, ரா.கரீசன் ராஜ்-168, வ.தனாதனன்-168, க.யனுஷ் -168, கு.தர்மிகா- 168, ஓ.கார்த்திகன்-168, ச.ஜஷ்கன்- 168, ச.யோதிநிலவன்- 168, ப.அஜன்-167, சி.ஆகீஷன்- 167, அ.கஜானி-167, வி.சதுஸ்ரிகா- 167, பி.டிவ்யானி -167, இ. கெவிந்டன்-166, சு.அஸ்வின்- 166, ஐ.யசிகா -166, ச.சபினயா-166, ஜெ.பிரமிலா -166, சு. மிதுஷ் - 165, சு.அர்ச் சனா-165, ரா.செபினா- 165, நி.மகிஷாஜினி-165, சா.பவுர்ணிகா-165, அ.தர்ஷனா -164, கு. ஸ்ரீகஜன்- 164, ல.ஸேனுஜா-164, பு.கியூரிகா-163, பி.டீபிகா- 163, இ. சுவஷ்திகா-163, க.பவிஷானந்த்-162, சி.ராகுலன்-162, கோ.ஹர்ஷன் -162, சி.டினோயன்- 162, அ.அபிஷன்- 160, பி. தேனுசாந்த்- 160.

**கிளி/கரியாலை நாகபடுவான் இல.02 அ.த.க. பாடசாலை**

செ.மதுசாளினி - 165.

**மு/மயில்வாகனம் தமிழ் வித்தியாலயம்**

கி.அக்ஷயன் - 191, கா.அக்சயன்-185, ச.அஸ்வரியா - 181, வ.அபிநயன் - 178, ர.சிறிப்பிரியன் - 171, ஸ்ரீ.தர்மிகா - 161.





யாழ்.பல்கலைக்கழகத்தில் நவீன வசதிகளுடன் கூடிய பிரமாண்டமான உள்ளக விளையாட்டு அரங்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. நாட்டில் தற்போது எழுந்துள்ள கொவிட்-19 நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, சுகாதார நடைமுறைகளுக்கமைய மட்டுப்படுத்தப்பட்டவர்களுடன் திறப்பு விழா இடம்பெற்றது. யாழ்.பல்கலைக்கழக உடற்கல்விப் பணிப்பாளர் கே.கணேசநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினரும், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் கல்வெட்டைத் திறந்து வைக்க யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா உள்ளக விளையாட்டரங்கைத் திறந்து வைத்தார்.

(படங்கள்:- சிவசாந்தன்)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சாட்சியங்களில் வாக்குமூலங்களை கோரிய சட்டமா அதிபர்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதிவிசாரணை ஆணைக்குழுவின் தலைவரிடம், ஆணையகத்தினால் பதிவுசெய்யப்பட்ட சில சாட்சியங்களின் வாக்குமூலங்களை வழங்குமாறு சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா கோரிக்கை விடுத்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை பரிசீலிக்க வேண்டும் என்பதன் காரணமாகவே இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஒருங்கிணைப்பாளரும் சட்டத்தரணியுமான நிஷாரஜெயரத்ன உறுதிப்படுத்தினார். (ஜ-4)




## AGRO LANKA OPTICAL AND DENTAL WORKS



அக்ரோ லங்கா பல், மூக்குக் கண்ணாடி விற்பனையகம் (மிதப்பு பற்களுக்கு கிளிப் செய்யுமிடம்)

மூக்குக் கண்ணாடி பிறேம் திருத்த வேலைகள் யாவும் (இலவசமாக) செய்து தரப்படும். வாரத்தின் 7 நாட்களும் (ஞாயிறு, விடுமுறை நாட்கள்) உட்பட திறந்திருக்கும்.

நவின ரக பிறேம்களுடன் (HALF FRAME மற்றும் NEW MODEL PLASTIC FRAME) கண்ணாடிகளுக்கு அனைவருக்கும் விசேட விலைக் கழிவுகள் வழங்கப்படுகிறது. மாணவர்கள் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரத்திற்காக கண்ணாடி எடுப்பவர்களுக்கு மேலும் பல சலுகைகள். பற்கள் கிளிப் செய்வதற்கும் விலைக் கழிவுகள் வழங்கப்படும்.

இல.634, ஆஸ்பத்திரி வீதி, (முன்னைய இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் முன்பாக,) யாழ்ப்பாணம்.

தொலைபேசி:-
077 642 6196, 074 006 0269
021 433 0894

Mail:-agrolankaoptical@gmail.com.

(C-725)


## சமூக வலுவூட்டாளர் பதவி வெற்றிடம்
## யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனம்

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனமானது யாழ்ப்பாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு பிரதேச மீன்பிடி சங்கங்களின் நலனோம்பு வேலைத் திட்டங்களில் ஈடுபடும் ஓர் அமைப்பாகும். ILO நிறுவன அனுசரணையுடன் இந்நிறுவனத்தினால் மீளக் குடியமர்ந்த மக்களுக்காக தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குள் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வாழ்வாதார திட்டத்திற்கு பின்வரும் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளது. பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளவர் தெல்லிப்பளை பிரதேச செயலாளர் செயலக எல்லைக்குள் பணிபுரிய வேண்டும் என்பதோடு மாவட்ட மீனவர் சம்மேளனத்தினருடனும் நிதி வழங்குநருடனும் இணைந்து செயற்பட வேண்டும்.

**பதவி:** சமூக வலுவூட்டாளர் (கள உத்தியோகத்தர்)

**காலம்:** 4 மாதங்கள்

**தகைமை:**
- க.பொ.த.உயர்தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- கணனி பயிற்சி பெற்றவர்கள் முன்னுரிமைப்படுத்தப்படுவர்.
- மேலதிகமாக மீன்பிடித்துறை சார்ந்த அனுபவ அறிவு இருத்தல் விரும்பத்தக்கது.
- மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் கொண்டிருத்தல் அவசியம்.

இப்பணி பெண்கள் குழுக்களுடன் பணிபுரிய வேண்டியிருப்பதனால் பெண்கள் முன்னுரிமைப்படுத்தப்படுவர்.

**அனுபவம்:** 1 வருடத்துக்கு மேற்பட்ட பணியனுபவம் விரும்பத்தக்கது.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் தங்கள் சுயவிபரக் கோவையை கீழ்வரும் முகவரிக்கு எதிர்வரும் 25.11.2020 இற்கு முன்னதாக தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்கவும். தகுதியான விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.

**தலைவர்**
**யாழ்.மாவட்ட மீன்பிடியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனம்,**
**இல.100, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி இல: 021 222 9797 / 077 005 1754 / 077 248 9727**

(C-727)

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை
## வழங்குநர்களை பதிவு செய்தல்-2021

எமது சபையினால் 2021 ஆம் ஆண்டிற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் சேவைகளை வழங்குவதற்குத் தம்மை பதிவு செய்ய விரும்பும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பொருட்கள்**

01. காகிதாதிகள் எழுது பொருட்கள்
02. அலுவலக உபகரணங்கள் (தளபாடங்கள்)
03. சித்த மருத்துவ மருந்துகள்
04. நூலகங்களுக்கான நூல்கள்
05. துணி வகைகள்
06. கட்டடப் பொருட்கள் (சீமெந்து, ஓடுகள், கம்பி வகைகள்)
07. கற்கள், மணல்கள்
08. தீந்தை வகைகள் (paints) நிறம் தீட்டும் பொருள்கள்
09. நீர் வழங்கும் குழாய்கள் மற்றும் ஏனைய பொருள்கள்
10. வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள்
11. மின் வழங்கு பொருள்கள் மின் பாவனைப் பொருட்கள்
12. எரிபொருள்கள், உராய்வு நீக்கி
13. இரும்பு பொருட்கள்
14. தீராந்திகள், பலகைகள், சட்டங்கள்
15. பனை மரங்கள், சலாகைகள்
16. வாகனங்களுக்கான ரயர், ரியூப் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
17. கணினி பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
18. சுத்திகரிப்பு பொருள்கள், கிருமிநாசினிகள்
19. பாதணிகள், தோல் பொருள்கள் மழை அங்கிகள்
20. அலங்காரப் பொருட்கள்
21. இலத்திரனியல் பொருட்கள்

**சேவைகள்**

01. அச்சிடுதல், பதாகைகள் அமைத்தல், ஸ்ரிக்கர் அச்சிடுதல், நூல்கள் கட்டுதல்
02. மோட்டார் வாகனங்கள், உழவு இயந்திரங்கள் திருத்துதல்
03. வாகனங்களுக்கான ரியூப் ஒட்டுதல், ரயர் மாற்றுதல்
04. ஒட்டுவேலைகள், உலோக வேலைகள்
05. கனரக வாகனங்களின் சேவை, வாடகைக்குவிடல்
06. மின்சாதனங்களின் திருத்தம், மீள மின் வலுவூட்டல்
07. இலத்திரனியல் சாதனங்கள் திருத்தம்
08. வாகனங்கள் சுத்திகரிப்பு
09. கோலவுடை தைத்தல்
10. கணினி பிரதியாக்கல் இயந்திரத்திருத்தம், சுத்திகரிப்பு
11. இறப்பர் முத்திரை தயாரித்தல்
12. வீதி விளக்குகள் பொருத்தல்
13. வீதி கட்டடம் புனரமைப்பு, நிர்மாண வேலை

பதிவானது ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். படிவங்களை தலைமை அலுவலகத்தின் நிதிக்கிளையில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக்கட்டணமாக ரூபா 1000.00 (வரிகள் நீங்கலாக ) செலுத்தப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்கள் கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் "வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் 2021" எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் தவிசாளர், தலைமை அலுவலகம், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் 31.12.2020 ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விபரங்களுக்கு 024 324 3544 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

**தவிசாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,**
**பளை.**

(C-729)

## 2021ம் ஆண்டுக்கான வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல்

## மாவட்ட செயலகம் - கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கும் கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகங்களுக்குமான வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் 2021ம் ஆண்டுக்காக பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் 24.12.2020ம் திகதிவரை கோரப்படுகின்றது.

பதிவு நிபந்தனைகள், கட்டண விபரங்கள், மாதிரி விண்ணப்ப படிவம் என்பவற்றை **www.kilinochchi.dist.gov.lk** மாவட்ட செயலக இணையத்தளம் அல்லது மாவட்ட செயலக கணக்கு கிளையிலோ 24.12.2020 ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம்.

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு மாவட்ட செயலக பின்வரும் தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளலாம். 021 228 5352, 021 228 5309

**திருமதி.றூ.கேதீஸ்வரன்**
**மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர்,**
**மாவட்ட செயலகம், கிளிநொச்சி.**

(C-721)

## வலம்புரி செய்தியை அடுத்து

# ஆபத்தான மரங்களை அகற்றும் அரச மரக் கூட்டுத்தாபனம்

## நன்றி தெரிவிக்கும் மக்கள்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் வீதியோரங்களில் காணப்படுகின்ற அபாயகரமான மரங்களை அகற்றுமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். குறிப்பாக அண்மைய நாட்களாக கனமழை பொழிவதோடு கடும் காற்று வீசுகின்றமையால் மரங்கள் முறிந்து விழுந்து வீதியால் பயணிக்கின்றவர்கள் காய மடைகின்ற சம்பவங்களும் இடம்பெற்று வருவதாகவும் குறிப்பாக இரண்டரை மாதங்களுக்கு முன்பு முல்லைத்தீவு மாவட்டத்தில் இவ்வாறு வீதி ஓரத்தில் இருந்த மரமொன்று கடும்காற்று மற்றும் மழை காரணமாக சரிந்து விழுந்ததில் வீதியால் பயணித்த இருவர் உயிரிழந்த சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

எனவே வீதியோரத்தில் இருக்கும் அபாயகரமான மரங்களை அகற்றுமாறு வலம்புரி சுட்டிக்காட்டியிருந்தது.

வலம்புரிப் பத்திரிகையில் வெளியான செய்தியினை அடுத்து முல்லைத்தீவு, மாங்குளம் பிரதான வீதியில் மிக ஆபத்தான நிலையில் இருந்த மரங்களினை அரச மரக்கூட்டுத்தாபனத்தினர் நேற்று முன்தினம் அகற்றியதுடன் ஒட்டு சுட்டான் மாங்குளம் வீதியில் காணப்படும் இவ்வாறான மரங்களை அகற்றும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த பணியினை விரைந்து மேற்கொண்ட அதிகாரிகளுக்கு மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர். (4-5-281)

# கருவாடு பதனிடும் பணியில் மன்னார் மாவட்ட பெண்கள்

(மன்னார்)

மன்னார் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் அனுசரணையில் மன்னார் மாவட்டத்தில் உள்ள மீனவ பெண்கள் தற்போதைய சூழ்நிலையில் தமது பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அதற்கமைவாக தமது வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் தற்போது பிரதான தொழிலாக கொண்ட மீன் பிடித் தொழிலில் மீன்கள் ஏற்றுமதி இன்மையால் மீன்களைக் கொள்வனவு செய்து அவற்றினை கருவாடாக பதனிட்டு புதிய சந்தை விற்பனையை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மன்னார் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனமானது நாட்டில் ஏட்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையினை கருத்தில் கொண்டு பாதுகாப்பு செயன் முறையினை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது.



அதற்கமைய கொவிட்-19 தொற்றுக் காரணமாக மீனவர்கள் மீன்களை சந்தைப் படுத்துவதில் தொடர்ச்சியாக பாரிய பிரச்சினைகளை சந்தித்து வருகின்றனர்.

மன்னார் சமூக,பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டுள்ள மீனவ பெண்கள் குழுக்களினூடாக சந்தைப்படுத்த முடியாத மீன்களை நியாய-விலையில் கொள்வனவு செய்து கருவாடு பதனிடும் செயற்பாடு முன்னெடுக்கப்படுகிறது.

இவ்வாறாக பதனிடப்பட்ட கருவாடுகள் பொதி செய்யப்பட்டு சந்தைப்படுத்தலுக்கு தயாராகின்றது.

குறித்த பணியில் பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களின் பெண்கள் ஈடுபட்டு வருகின்றனர். சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக குறித்த நடவடிக்கைகள் மன்னார் மற்றும் மாந்தை மேற்கு பிரதேச பிரிவுக்குட்பட்ட மீனவ கிராமங்களிலும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-5-285)

# 19 பேர் ஆதரவுடன் பாதீடு நிறைவேற்றம்

(குருமன்காடு)

வவுனியா நகரசபையின் 2021 ஆம் ஆண்டு பாதீடு தொடர்பான அமர்வு தவிசாளர் இ.கௌதமன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது தவிசாளரால் முன்வைக்கப்பட்ட பாதீடானது 19 உறுப்பினர்களின் ஆதரவுடன் ஏகமனதாக நிறை வேற்றப்பட்டது.

(5-4-250)

# 7 மேலதிக வாக்குகளால் பாதீடு வெற்றி பெற்றது

(முறிகண்டி)

கரைச்சி பிரதேச சபையின் 2021ம் ஆண்டுக்கான பாதீடு 7 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றது. 2021ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டம் தொடர்பான விசேட அமர்வு நேற்று வியாழக்கிழமை பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது 2021 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்ட அறிக்கையினை தவிசாளர் சபையில் சமர்ப்பித்தார். அதனைத் தொடர்ந்து விவாதங்கள் இடம்பெற்றன.


அதன் பின்னர் இடம்பெற்ற வாக்கெடுப்பில் ஆதரவாக 20 வாக்குகளும், எதிராக 13 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் ஒருவரும், சுயேட்சைக்குழு உறுப்பினர் ஒருவரும் சபையில் கலந்து கொள்ளவில்லை. 7 மேலதிக வாக்குகளால் பாதீடு வெற்றி பெற்றது. (5-4-100)

# தந்தை இறந்த சோகத்திலும் சாதித்த மாணவி


(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை மாணவியான கிசானிகா லோகேஸ்வரன் தனது தந்தை இறந்து நான்கு மாதத்தில் பரீட்சைக்கு தோற்றி பரீட்சையில் சாதித்துள்ளார். குறித்த மாணவி அண்மையில் வெளியாகிய தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் 181 புள்ளிகளை பெற்றுள்ளார்.



தனது தந்தையின் கனவை நனவாக்க, தான் ஒரு வைத்தியராகி தனது மாவட்ட மக்களுக்கு சேவையாற்றுவேன் எனக் குறித்த மாணவி தெரிவித்தார். (4-5-281)

# ஹன்டர் மரத்துடன் மோதி விபத்து; மூவர் படுகாயம்



(நெளுக்குளம்)

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் இடம் பெற்ற விபத்தில் மூன்று பேர் காயமடைந்த நிலையில் வவு னியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்து தொடர்பாக தெரியவருகையில்,

நேற்று பிற்பகல் ஓமந்தை பகுதியில் இருந்து வவுனியா நோக்கி வந்து கொண்டிருந்த ஹன்டர் ரக வாகனம் தாண்டிக்குளம் பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து அருகில் இருந்த மரத்துடன் மோதி விபத்திற்குள்ளாகியது.

விபத்தில் ஹன்டர் வாகனத்தில் பயணித்த இருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் விபத்திற்குள்ளான வாகனத்துடன் மோதிய மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் ஒருவரும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் (5-4-299)

## இராசிபலன்

20.11.2020
கார்த்திகை 05, வெள்ளிக்கிழமை
சஷ்டி பின்னிரவு 2.50 மணிவரை
உத்தராடம் பிற்பகல் 2.56 மணிவரை
சுபநேரம் 6.09-7.39 மணிவரை
இராகுகாலம் 10.39-12.09 மணிவரை
சந்திராஷ்டமம்:- மிருகசீரிடம், திருவாதிரை
ஸ்கந்த சஷ்டி விரதம் வளவன்


மேஷம்

வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், ஆரோக்கியமான நாள்


ரிஷபம்

தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தேகநலனில் இருந்த குழப்பங்கள் அகலும், அதிகம் செலவாகுமென நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடிவுக்கு வரலாம்.


மிதுனம்

சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, திடீர் செலவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


கடகம்

அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.


சிம்மம்

போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு, வழிபாட்டில் ஆர்வம் கூடும்.


கன்னி

உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், வியாபாரத்தை விரிவுபடுத்த எடுத்த முயற்சிகள் கைகூடும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.


துலாம்

நம்பி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழிலில் ஆர்வம் கூடும், பயணங்களால் பலனுண்டு.


விருச்சிகம்

பாராட்டும் புகழும் கூடும் நாள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், போசன சுகமுண்டு.


தனுசு

நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.


மகரம்

வழிபாட்டில் சிறப்பினைக் காண வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு, பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.


கும்பம்

இறை வழிபாட்டில் ஆர்வம் கூடும், சிறிய வேலையொன்றிற்காக சற்று அலைய நேரிடலாம், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், சயனசுகக் குறைவான நாள்.


மீனம்

அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமையும், வாழ்க்கைத் தேவைகளை பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், நட்பு வட்டம் விரிவடையும் நாள்.

உன்னோடு எப்பொழுதும் வாழப்போகும் ஒரே நண்பர் கடவுள் ஒருவரே.

# ஆயிரம் ரூபா சம்பளம்; எங்களுக்கு தெரியாது

## தோட்டக் கம்பனிகள் கைவிரிப்பு

**(கொழும்பு)**

**அடுத்த வருடத்தில் இருந்து தோட்டத் தொழிலாளர்களுக்கு தினம் 1000 ரூபா சம்பளத்தை வழங்குவதாக அறிவிக்கப்பட்ட பட்ஜெட் முன்மொழிவு தொடர்பாக அரசாங்கம் தங்களை அணுகவில்லை என்று பெருந்தோட்டக் கம்பனிகள் தெரிவித்துள்ளன.**

அரசாங்கத்தினால் மானியம் வழங்கப்படாத பட்சத்தில் 1000 ரூபா தினச் சம்பளத்தை வழங்குவதற்கு இணங்குவதை தாங்கள் தற்போது அடைகின்ற பாரியளவு நட்டங்கள் தடுக் கும் என்றும் கம்பனிகள் சுட்டிக்காட்டியுள்ளன. நேற்று முன்தினம் இணையவழி செய்தியாளர் மகாநாட்டில் கலந்து கொண்ட இலங்கை தோட்டத் துரைமார் சங்கம் அரசாங்கத்தால் முன்வைக் கப்பட்டிருக்கும் மாற்று சம்பளத் திட்டத்தை பெருந்தோட்டக் கம்பனிகளும் அரசியல்வாதிகளும் ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியம் என வலியுறுத்தியிருந்தது.

இதற்குப் பதிலளிக்கும் முகமாகவே பெருந்தோட்டக் கம்பனிகள் இதனைத் தெரிவித்துள்ளன. (ஜ-4)

## முகக்கவசங்களுக்கு புதிய விலை



(கொழும்பு)

முகக்கவசங்களுக்கு புதிய விலைக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

ஔடத உற்பத்தி இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமனவுக்கும் இறக்குமதியாளர்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போது இந்தக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி சத்திர சிகிச்சையின்போது பயன்படுத்தப்படும் முகக்கவசம் 15 ரூபாவுக்கும் N95 ரக முகக்கவசம் 100 ரூபாவுக்கும் விற்பனை செய்யவுள்ளதாகவும் இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நாட்டில் கொரோனாத் தொற்றின் இரண்டாம் அலை வேகமாகப் பரவி வருகின்றது. இதனால் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## 91 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)


கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 91 இலங்கையர்கள் நாடு திரும்பினர்.

அதன்படி சீனாவின் குவாங்சோவிலிருந்து 4 பேரும் அபுதாபியிலிருந்து 5 பேரும் கட்டார் - டோஹாவிலிருந்து 39 பேரும் மஸ்கட் - ஓமானிலிருந்து 30 பேரும் பாகிஸ்தான் கராச்சியிலிருந்து 13 பேரும் இவ்வாறு நாடு திரும்பினர்.

நாடு திரும்பிய அனைவருக்கும் விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, அவர்கள் அனைவரையும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## கொழும்பில் 6 ஆயிரம் தொற்றாளர்கள்



(கொழும்பு)

கொழும்பில் இதுவரை 6 ஆயிரம் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் 157 தொற்றாளர்கள் கொழும்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர். இதன்படி கொழும்பில் தொற்றாளர்களின் எண்ணிக்கை 6 ஆயிரமாக அதிகரித்துள்ளது. (ஜ-4)

## ஒருவர் கைது

(கொழும்பு)

விமானப் பொறியியலாளர் எனக் கூறிக்கொண்டு 5 ஆயிரம் மற்றும் ஆயிரம் ரூபாய் போலி நாணயத்தாள்களை அச்சிட்ட சந்தேகநபரொருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடம் இருந்து போலி ஊரடங்குச் சட்ட அனுமதிப் பத்திரம், சான்றிதழ்கள் மற்றும் உத்தியோகபூர்வ இலட்சினைகள் என்பவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (ஜ-4)

# பூநகரிப் பிரதேசசபை
# பொதுச் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல்-2021

கீழ்க்குறிப்பிடப்படும் பிரதேசசபை எல்லைப்பரப்பிற்குட்பட்ட இடங்களிற்கு உட்பட்ட பொதுச் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக்கடைகள் என்பன 2021ம் ஆண்டிற்காக 01.01.2021 தொடக்கம் 31.12.2021 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு கேள்விகள் பொருத்தமான நபர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

- மீள் கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 23.11.2020 தொடக்கம் 03.12.2020வரை
  காலம் மு.ப.8.30 -பி.ப 3.30 வரை
- மீள் கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி : 04.12.2020 மதியம் 12.00 மணி வரை
- மீள் கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 04.12.2020 பி.ப 12.30 மணி

**கேள்வி நிபந்தனைகள் :**

1. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை தவிசாளர் பிரதேச சபை, பூநகரி எனும் முகவரிக்கு அரச முத்திரை இட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடுதல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு04.12.2020ஆம் திகதி மதியம் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரங்களினை பெற விரும்புபவர்கள் பிரதேச கிராம சேவையாளரின் வதிவிடச்சான்றிதழ் மற்றும் கிராம சேவையாளரினால் தேசிய அடையாள அட்டையினை உறுதிப்படுத்தி சமர்ப்பித்தல் வேண்டும்.
3. கேள்விப்பத்திரங்கள் பெற விரும்புபவர்கள் மீளளிக்கப்படாத படிவக்கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணத்தினையும் செலுத்த வேண்டும்.
4. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராக கணிக்கப்பட்ட எவரிற்கும் படிவம் வழங்கப்பட மாட்டாது.
5. கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் நாளன்று கேள்வியாளரோ அல்லது அவரின் பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
6. கேள்வி நிபந்தனைகள் அறிவுறுத்தலிற்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளினை நிராகரிக்கின்ற அதிகாரம் கேள்விச்சபைத் தலைவரிற்கு உண்டு.
7. **இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு எடுப்பவராலேயே நடாத்தப்படவேண்டும். குத்தகைக்கு எடுத்தவர் இன்றி அவர் சார்பாக வேறு ஒருவரால் நடாத்தப்படின் குத்தகை ஒப்பந்தம் இரத்துச்செய்யப்படும்.**
8. **அரச கால்நடை வைத்திய நிலையத்தால் காதில் பட்டியிடப்பட்ட மாடுகள் மட்டும் வெட்ட அனுமதிக்கப்படும்.**
9. **எம்மால் அமைக்கப்பட்டுள்ள கொல்களத்திலேயே இறைச்சிக்கான மாடுகள் வெட்டப்படவேண்டும்.**
10. **இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்படமுன்னர் எம்மால் குறித்துரைக்கப்படும் சட்ட திட்டங்களிற்கமைவாக நடந்து கொள்ள வேண்டும்.**
11. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித்தொகையின் மூன்றில் ஒரு பங்கினை 11.12.2020 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையோடு ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும்.
12. பெறுகைக்குழு கேள்வியை ஏற்றுக்கொள்வதுஅல்லது பகுதியாக ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது பெறுகைக்குழுவின் அதிகாரத்திற்குட்பட்டது ஆகும். கேள்விக்குட்படுத்தலாகாது.

(C-730)

2021ஆம் ஆண்டுக்கான பொதுச் சந்தைகள் , கருவாட்டுக் கடைகள்,இறைச்சிக்கடைகளிற்கான கேள்வி கோரல்

| தொ.இல | விடயம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்விக் கட்டணம் | ஏற்றுக் கொள்ளப்படும் ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| பொதுச்சந்தைகள் | | | | |
| பூநகரி உப அலுவலகம் | | | | |
| 1 | வாடியடி | 500.00 | 5000.00 | 38500.00 |
| 2 | முட்கொம்பன் | 500.00 | 3000.00 | 20100.00 |
| பல்லவராயன்கட்டு உப அலுவலகம் | | | | |
| 1 | ஜெயபுரம் | 500.00 | 5000.00 | 66000.00 |
| 2 | கிராஞ்சி | 500.00 | 3000.00 | 44000.00 |
| 3 | வலைப்பாடு | 500.00 | 3000.00 | 16500.00 |
| 4 | 19 ம் கட்டை | 500.00 | 3000.00 | 35000.00 |
| இரணை தீவு உப அலுவலகம் | | | | |
| 1 | நாச்சிக்குடா கடற்கரை | 500.00 | 3000.00 | 16500.00 |
| மாட்டிறைச்சிக்கடைகள் | | | | |
| பூநகரி உப அலுவலகம் | | | | |
| 1 | வாடியடி | 1000.00 | 8000.00 | 45100.00 |
| பல்லவராயன்கட்டு உப அலுவலகம் | | | | |
| 1 | ஜெயபுரம் | 1000.00 | 8000.00 | 27500.00 |
| 2 | கிராஞ்சி | 1000.00 | 3000.00 | 60500.00 |
| கோழியிறைச்சிக்கடைகள் | | | | |
| பல்லவராயன்கட்டு உப அலுவலகம் | | | | |
| 1 | ஜெயபுரம் | 500.00 | 3000.00 | 11000.00 |
| 2 | கிராஞ்சி | 500.00 | 3000.00 | 5610.00 |
| 3 | வலைப்பாடு | 500.00 | 3000.00 | 11110.00 |
| ஆட்டிறைச்சிக்கடை | | | | |
| பூநகரி உப அலுவலகம் | | | | |
| 1 | வாடியடி | 500.00 | 3000.00 | 5500.00 |
| 2 | பள்ளிக்குடா | 500.00 | 3000.00 | 5500.00 |
| பல்லவராயன்கட்டு உப அலுவலகம் | | | | |
| 1 | கிராஞ்சி | 500.00 | 3000.00 | 5500.00 |
| 2 | ஜெயபுரம் | 500.00 | 3000.00 | 5500.00 |
| கருவாட்டுக்கடை | | | | |
| பூநகரி உப அலுவலகம் | | | | |
| 1 | வாடியடி | 500.00 | 3000.00 | 11000.00 |
| 2 | பள்ளிக்குடா | 500.00 | 3000.00 | 11000.00 |
| பல்லவராயன்கட்டு உப அலுவலகம் | | | | |
| 1 | கிராஞ்சி | 500.00 | 3000.00 | 11000.00 |
| இரணை தீவு உப அலுவலகம் | | | | |
| 1 | நாச்சிக்குடா சந்தி இல - 01 | 500.00 | 3000.00 | 11000.00 |
| 2 | நாச்சிக்குடா சந்திஇல - 02 | 500.00 | 3000.00 | 11000.00 |

**அருணாசலம் ஐயம்பிள்ளை,**
**தவிசாளர், பிரதேச சபை, பூநகரி**

# பைசர் கொரோனா தடுப்பூசி
# இறுதிப் பரிசோதனையிலும் வெற்றி

(வோஷிங்டன்)

அமெரிக்க - ஜேர்மனி நிறுவனங்கள் இணைந்து தயாரித்துள்ள கொரோனாத்தடுப்பூசி 95 சதவீதம் பயனளிப்பதாக பைசர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஜேர்மனியின் பயான்டெக் நிறுவனமும் அமெரிக்காவின் பைசர் நிறுவனமும் இணைந்து கண்டுபிடித்த தடுப்பு மருந்து. இறுதிக்கட்ட பகுப்பாய்வு தரவுகளின்படி 95 சதவீதம் திறன் வாய்ந்தது என்று மருந்து நிறுவனம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்னும் சில நாட்களில் அமெரிக்க தடுப்பு மருந்து அமைப்பிடம் ஒப்புதல் பெற திட்டமிட்டுள்ளதாகவும் மருந்து நிறுவனம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 170 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டு பரிசோதனை செய் ததில் 95 சதவீதம் வெற்றி பெற்றுள்ளதாக கூறிய பைசர் நிறுவனம் வயதானவர்களுக்கும் பாதிப்பு ஏற்படாமல் தடுப்பதாகவும் தீவிர பக்க விளைவுகள் எதையும் ஏற்படுத்தவில்லை என்றும் தெரிவித்துள்ளது.

தடுப்பு மருந்து அனைத்துத் தரப்பினருக்குமானது என்று நிறுவனம் தரப்பில் அறிவித்தாலும் பைசர் நிறுவனம் கண்டுபிடித்துள்ள இந்த தடுப்பு மருந்து - 70 டிகிரி குளிர் நிலையில் பாதுகாக்கப்பட வேண்டும்.

இந்தியா, இலங்கை , ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் காலநிலை அளவு அதிகமாகவே உள்ளது. மேலை நாடுகளில் குளிர் நிலவுவதால் அங்கு இவற்றை பாதுகாப்பது மிக எளிது. ஆனால் வெப்ப மண்டலங்களில் இந்த தடுப்பு மருந்துகளை எடுத்துச் செல்வது மிகக்கடினம்.

ஆகவே இதனை ஆசிய நாடுகள் விலை கொடுத்து வாங்கினாலும் அனைத்து அரசு வைத்தியசாலைகளுக்கும் இதனைக் கொண்டு சேர்ப்பது, மேலும் பாதுகாப்பது கடினமான ஒன்று என் பதை மறுப்பதற்கில்லை. இது தற்போது பைசர் நிறுவனத்துக்கு மிகப்பெரிய சவாலாக உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-4)

## பஞ்சத்தை நீக்க ஐ.நா.நிதியுதவி

(ஜெனிவா)

கொரோனாத் தொற்றுக்கு மத்தியில் பஞ்சத்தை தவிர்க்கும் நோக்கில் எதியோப்பியா உள்ளிட்ட 7 நாடுகளுக்காக ஐக்கிய நாடுகள் சபையால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுக்கு மத்தியில் மோதல்கள், பொருளாதார வீழ்ச்சி, காலநிலை மாற்றம் போன்றவற்றால் எதிர் நோக்கும் பஞ்ச அபாயத்தைத் தடுக்க ஐக்கிய நாடுகள்சபை அவசர நிதியை நேற்று முன்தினம் வெளியிட்டது.

சுமார் 100 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. குறித்த 7 நாடுகளில் எதியோப்பியா, ஆப்கானிஸ்தான், புர்கினோ பசோ, கொங்கோ குடியரசு, தென் சூடான், ஏமன் ஆகிய நாடுகள்உள்ளடங்குகின்றன.(நி-4)

## ரஷ்ய தமிழறிஞர் உயிரிழப்பு

(மொஸ்கோ)

ரஷ்யத்தமிழறிஞர் அலெக்சாந்தர் துபியான்ஸ்கி மொஸ்கோவில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்த நிலையில் தனது 79 வயதில் நேற்று உயிரிழந்துள்ளார்.

இவர் ரஷ்யாவில் மொஸ்கோவின் அரசுப் பல்கலைக் கழகத்தின் தமிழ் இலக்கியப் பேராசிரியர் ஆவார்.

அத்துடன் தமிழ் மொழி மீது மிகுந்த பற்றுக்கொண்ட இவர், தமிழ் மொழியை சரள மாகப் பேசவும் கூடியவர். தொல்காப்பியம் சமஸ்கிருத அடிப்படையை கொண்டதல்ல எனத் தெளிவாக எடுத்துரைத்த தமிழ் அறிஞர் என்ற பெருமை இவரையே சாரும். (4)

# சிறையில் அசம்பாவிதங்கள் சுயாதீன விசாரணைக்கு குழு

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து நியாயமான விசாரணை ஒன்றினை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கென விசாரணைக் குழுவொன்றை நியமிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் சிறைக்கைதிகள் மறுவாழ்வு ராஜாங்க அமைச்சின் செயலாளர் கீதாமதி கருணாரத்னவுக்கு இதற்கான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி அமைச்சின் மேலதிக செயலாளர் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொனராகலை சிறைச்சாலையில் கைதியொருவர் உயிரிழந்தமை, மாத்தறை சிறைச்சாலையில் கைதியொருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை, போகம்பரை சிறைச்சாலையில் கைதியொருவர் தப்பிச் சென்றமை மற்றும் உயிரிழந்தமை, வெலிக்கடை மற்றும் மகஸின் சிறைச்சாலைகளில் கைதிகள் ஆர்ப்பாட்டம் நடத்தியமை உள்ளிட்ட சம்பவங்கள் குறித்து இந்த குழுவினால் சுயாதீன விசாரணை முன்னெடுக்கப்படவுள்ளது.

அத்துடன் இந்த விசாரணை குறித்த அறிக்கையை 3 வாரங்களுக்குள் சமர்ப்பிக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# குளத்தில் வீழ்ந்த மீனவர் மரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பதுளை வீதியை அண்டியுள்ள உறுகாமம் புதூர் குளத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு விழுந்து மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

உறுகாமம் புதூர் கிராமத்தில் வசிக்கும் அப்துல் காதர் அப்துல் ஸலாம் (வயது 58) எனும் 7 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, வழமைபோன்று இவர் உறுகாமம் புதூர் குளத்தில் இரவு நேர மீன்பிடிக்காக வீட்டிலிருந்து சென்றுள்ளார். பின்னர் சிறிது நேரத்தில் இவர் குளத்தில் விழுந்து உயிரிழந்து கிடப்பது பற்றிசக மீனவர்கள் கண்டு சடலத்தை மீட்டெடுத்துள்ளனர்.

இது பற்றி கரடியனாறு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதும் பொலிஸார் ஸ்தலத்திற்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஜ-4)

# ரின் மீனுக்கான சில்லறை விலை நிர்ணயம்




(கொழும்பு)

உள்ளூர் ரின் மீன் உற்பத்திகளை அதிகரிப்பதற்கு தேவையான பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று உறுதியளித்த அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா மற்றும் பந்துல குணவர்த்தன ஆகியோர் ரின் மீன்களுக்கான சில்லறை விலையை 200 ரூபாய் என வும் நிர்ணயம் செய்துள்ளனர்.

உள்ளூர் ரின்மீன் உற்பத்தியாளர்களுக்கும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன ஆகியோருக்கும் இடையில் நேற்று முன்தினம் வர்த்தக அமைச்சில் நடத்தப்பட்ட கலந்துரையாடலினை தொடர்ந்தே குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது கருத்துக்களைத் தெரிவித்த அமைச்சர்கள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் வழிநடத்தலில் செயற்பட்டு வருகின்ற தற்போதைய அரசாங்கம், சுய பொருளாதாரத்தினை விருத்தி செய்வதில் முழுமையாக ஆர்வம் காட்டி வருகின்ற நிலையில், உள்ளூர் ரின்மீன் உற்பத்திகள் பாதிக்க அனுமதிக்கப்படமாட்டாது என்று தெரிவித்தனர். (ஜ-4)

# சிறப்பு வசதிகளுடன் திறக்கப்பட்டுள்ள கட்டுநாயக்கவின் 2 ஆம் முனையம்



(கொழும்பு)

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் முனையம் 2 இற்கான **(Terminal 2)** கட்டுமானப் பணிகள் நேற்று முன்தினம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த 2 ஆம் முனையத்தின் அபிவிருத்தி திட்டத்திற்கு ஜப்பான் முதலீடு செய்துள்ளதுடன் இதனை மூன்றாண்டுகளுக்குள் கட்டி முடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நவீன தொழில்நுட்ப பயன்பாட்டின் மூலம் பணிகள் நிறைவு செய்யப்படவுள்ள இத்திட்டத்தில், வருகை தரும் மற்றும் வெளியேறும் பயணிகளை வேறுபடுத்தல், மையப்படுத்தப்பட்ட பாதுகாப்பு கட்டுப்பாட்டு அமைப்பு, பல மாடிகளைகொண்ட வாகன நிறுத்துமிடங்களிலிருந்து விமான நிலையத்திற்கு நேரடியாக வருகை தரல் மற்றும் வெளிச் செல்லும் வசதி, பெரிய விமானங்களின் பயணங்களுக்கென **(Airbus A-380)** ஒதுக்கப்பட்ட பயணிகள் நுழைவாயில், சிறப்பு விருந்தினர் ஓய்வறை, விமான பணியாளர் ஓய்வறை - வருகைகள் மற்றும் புறப்பாடு நுழைவாயில்களை அண்மித்த ஓய் வறைகள், சுங்க வரிகள் அற்ற கடைகள், உணவகங்கள், பார்வையாளர் கூடம் முதலியவற்றை உள்ளடக்கிய முழுமையான தளவமைப்பைக் கொண்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# குணமடைந்தோர் 12,584

(கொழும்பு)

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 377 பேர் பூரணமாக குணமடைந்து வீடுகளுக்கு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து இதுவரையில் குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 587 ஆக அதிகரித்துள்ளது. (ஜ-4)

# கழிவு நீர் அமைப்பில் கொரோனா வைரஸ்?

## வைத்திய நிபுணர் சுதத் சமரவீர சுட்டிக்காட்டு



(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று கழிவுநீர் அமைப்பில் இருக்கக்கூடும் என்றும் இந்த வைரஸின் நடத்தை இன்னும் ஆய்வில் உள்ளது எனவும் தொற்று நோயியல் பிரிவின் தலைவர் வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,


"வைரஸ் இருப்பதை மருத்துவ சமூகம் ஏற்கனவே அறிந்திருக்கிறது. குறிப்பாக கழிவுநீர் அமைப்பில், இது ஒரு வகையில் நீர் அமைப்பில் சேர்க்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது"

எவ்வாறாயினும், வைரஸின் நடத்தை இன்னும் ஆய்வில் உள்ளது. எனவே இன்று கூறப்படுவது புதிய ஆதாரங்களுடன் நாளை மாறக்கூடும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தலைமையிலான கொரோனா வைரஸ் ஒழிப்பு பணிக்குழுமறு ஆய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் சுகாதார அமைச்சில் நடைபெற்றது.

மேற்கு மாகாணத்தில் உள்ள பொருளாதார மையங்கள், வாடகை வீடுகள், பாடசாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள் சுகாதார வழிகாட்டுதல்களின்படி செயற்படுகின்றனவா? என்பதை சுகாதார அதிகாரி ஒருவர் ஆய்வு செய்வது கட்டாயமாகும் என்று சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

# இலங்கை ஆயுதப்படையினர் இந்தியாவில் கூட்டுப் பயிற்சி



(கொழும்பு)

இந்தியாவின் வெளிநாட்டு படையினருக்கான இராணுவ பயிற்சி ஒதுக்கீடுகளில் பாதிக்கும் மேற்பட்டவை இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளதாக இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் நேற்று அறிவித்துள்ளது.

அந்த வகையில் ஆண்டுதோறும், இலங்கை ஆயுதப் படைகளைச் சேர்ந்த 1200 க்கும் மேற்பட்டவர்கள் இந்தியாவில் பயிற்சி பெறுகின்றனர். இவர்களில் கிட்டத்தட்ட 250 பேர் இலங்கை வான் படையைச் சேர்ந்தவர்கள்.

கூட்டுப் பயிற்சி என்பது நட்புறவை ஊக்குவிப்பதுடன் பொதுவான பாதுகாப்பு நலன்களைப் பாதுகாப்பதற்கும் பிராந்திய அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு பங்களிப்பதற்கும் இது உதவுவதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது. (ஜ-4)

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

## 16.11.2020 - 15.12.2020

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**சா**ர்வரி வருடம் கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன், சுக்கிரனோடு சேர்ந்து 5 ஆம் இடத்தில் பரிவர்த்தனை யோகம் பெற்றிருக்கின்றார். அதேநேரத்தில் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனியும் குரு வீட்டில் பரிவர்த்தனை யோகம் பெற்றிருக்கின்றார். எனவே இந்த மாதம் செய்தொழில் சிறப்படையும்.

**துலாம் இராசியில் சுக்கிரன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் நவம்பர் 17 ஆம் கிததி தனது சொந்த வீடான துலாம் இராசியில் சஞ்சரிக்கப் போகின்றார். அங்குள்ள புதனோடு இணைந்து 'புத-சுக்கிர யோக'த்தை உருவாக்கப் போவதால், பிள்ளைகள் வழியில் நல்ல தகவல் வந்து சேரும். வெளிநாட்டிலிருந்து எதிர்பார்த்த தகவல் வரலாம். டிசெம்பர் 12 ஆம் திகதி விருச்சிக இராசிக்கு சுக்கிரன் வருகின்றார். 12 இற்கு அதிபதியான சுக்கிரன் 6 ஆம் இடத்திற்கு வரும்பொழுது, திடீர் மாற்றங்களும் ஏற்றங்களும் உருவாகும்.

**செவ்வாய் வக்கிர நிவர்த்தி காலம்**

நவம்பர் 24 ஆம் திகதி செவ்வாய் வக்கிர நிவர்த்தியாகின்றார். உங்கள் இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் வக்கிர நிவர்த்தியாகும் பொழுது, நன்மைகள் அதிகம் நடைபெறும். எதிர்பார்த்த இலாபம் தொழிலில் கிடைக்கும். மூத்த சகோதரர்களோடு இருந்த பகை அகலும். தொழில் ஸ்தானத்தில் செவ்வாய் வக்கிர நிவர்த்தியாவதால் தொழில் வளம் சிறப்பாக இருக்கும்.

## செய்தொழில் சிறப்படையும்

**விருச்சிக புதன் சஞ்சாரம்**

நவம்பர் 25 ஆம் திகதி, விருச்சிக இராசிக்கு புதன் வருகின்றார். உங்கள் இராசிநாதன் புதன் 6 ஆம் இடத்திற்கு வரும் பொழுது, எதிரிகளின் பலம் குறையும். இலாப நோக்கத்தோடு பழகியவர்களை இனம் கண்டுகொள்வீர்கள். உத்தியோகம் சம்பந்தமாக நீங்கள் செய்த புது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். சுகஸ்தானாதிபதியாகவும்




புதன் விளங்குவதால் இக்காலத்தில் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும்.

**மேஷ செவ்வாய் சஞ்சாரம்**

டிசெம்பர் 9 ஆம் திகதி மேஷ இராசிக்கு செவ்வாய் செல்கின்றார். 11 ஆம் இடத்திற்கு அதிபதியான செவ்வாய், பலம் பெறும் இந்த நேரத்தில் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். தொழில் வளர்ச்சிக்கு மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். வெளிநாட்டில் பணிபுரிய விரும்புபவர்களுக்கு நல்ல தகவல் இப்பொழுது வரலாம். 'நண்பர்களோடு சேர்ந்து தொழில் தொடங்கலாமா?' என்று சிந்தித்தவர்களுக்கு இது உகந்த நேரமாகும்.

**தனுசு புதன் சஞ்சாரம்**

டிசெம்பர் 12 ஆம் திகதி தனுசு இராசிக்கு புதன் செல்கின்றார். உங்கள் இராசிநாதன் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் பொருளாதார பற்றாக்குறை அகலும். புகழ்மிக்கவர்கள் உங்களுக்கு புதிய வாய்ப்புகளை வரவழைத்துக் கொடுப்பர். ஒதுங்கி நின்ற ஒப்பந்தங்கள் ஓடிவந்து சேரும். இம்மாதம் ஏகாதசியன்று விரதமிருந்து திருமால் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். உற்சாகத்தோடு பணிபுரிந்து உங்கள் அருகில் இருப்பவர்களை ஆச்சரியப்படுத்துவீர்கள். கணவன்-மனைவிக்குள் அன்பும், பாசமும் அதிகரிக்கும். உடன்பிறப்புகள் உங்கள் எண்ணங்களைப் பூர்த்தி செய்ய முன்வருவர். பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் திருப்திகரமாக அமையும். ப்ணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். மகாலட்சுமி வழிபாடு மகிழ்ச்சியை வழங்கும்.



**சா**ர்வரி வருடம் கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சந்திரன் பஞ்சம ஸ்தானத்தில் சூரியன் மற்றும் கேதுவோடு இணைந்திருக்கின்றார். சகாய ஸ்தானாதிபதி புதன், சுக்கிரனோடு சேர்ந்து பரிவர்த்தனை யோகம் பெற்றுத் திகழ்கிறார். சப்தம ஸ்தானாதிபதி சனியும் குரு வீட்டில் பரிவர்த்தனை யோகம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். எனவே மனக்கவலையும் பணக்கவலையும் தீரும்.

**துலாம் இராசியில் சுக்கிரன் சஞ்சாரம்**

நவம்பர் 17 ஆம் திகதி துலாம் இராசிக்கு சுக்கிரன் வருகின்றார். அங்குள்ள புதனோடு இணைந்து 'புத-சுக்கிர யோகத்தை உருவாக்குகின்றார். எனவே, புதிய சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. தாய்வழி ஆதரவு உண்டு. தொழிலில் இருந்த இடையூறுகள் அகலும். நண்பர்கள் உங்களுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவர்.

**செவ்வாய் வக்கிர நிவர்த்தி காலம்**

நவம்பர் 24 ஆம் திகதி மீன இராசியில் சஞ்சரிக்கும் செவ்வாய் வக்கிர நிவர்த்தியாகின்றார். இனி உங்களுக்கு யோகமான நேரம்தான். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். உடன்பிறப்புகள் உங்கள் குரலுக்கு செவிசாய்ப்பர். தடம் மாறிச் சென்று உங்களோடு விரோதித்துக் கொண்டவர்கள் கூட இப்பொழுது ஒத்துவருவர். உங்கள் எதிர்கால நலன் கருதி முக்கிய முடிவெடுப்பீர்கள். பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும் பதவிகளும் வரலாம். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும்.

**விருச்சிக புதன் சஞ்சாரம்**

நவம்பர் 25 ஆம் திகதி விருச்சிக இராசிக்கு புதன் வருகின்றார். உங்கள்

## மனக்கவலையும் பணக்கவலையும் தீரும்

இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் பஞ்சம ஸ்தானத்தில் வரும்பொழுது சகோதர ஒற்றுமை பலப்படும். வழக்குகள் சாதகமாக முடியும். இக்காலத்தில் 'புத-ஆதித்ய யோகம்' செயற்படுவதால் பிள்ளைகளின் மேற்படிப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். புதிய வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மேஷ செவ்வாய் சஞ்சாரம்**

டிசெம்பர் 9 ஆம் திகதி மேஷ இராசிக்கு செவ்வாய் செல்கின்றார். தொழில் ஸ்தானத்தில் செவ்வாய் சஞ்சரிக்கும் இந்த நேரம் தொழில் வளம் சிறப்பாக




இருக்கும். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவோடு புதிய வாய்ப்புகளை வரவழைத்துக் கொள்வீர்கள். சொத்துக்களாலும் சொந்தங்களாலும் ஆதாயம் உண்டு. பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த முன்னேற்றங்களும் மேலதிகாரிகளின் ஆதரவும் உண்டு.

**தனுசு புதன் சஞ்சாரம்**

டிசெம்பர் 12 ஆம் திகதி தனுசு இராசிக்கு புதன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் 6 ஆம் இடத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். அங்கிருந்து கொண்டு தன் வீடான மிதுன இராசியைப் பார்ப்பதால், அற்புதமான பலன்கள் வந்து சேரும். திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறும். பணத் தேவை உடனுக்குடன் பூர்த்தியாகும். தற்காலிகப் பணியில் இருந்தவர்கள் நிரந்தரப் பணியாளர்களாக மாறுவர்.

பௌர்ணமி தோறும் விரதமிருந்து வள்ளிமணாளன் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் செவ்வாய் வக்கிர நிவர்த்திக்குப் பிறகு செல்வ நிலை உயரும். கணவன்-மனைவிக்குள் கருத்தொருமித்த வாழ்க்கை நடக்கும். பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி நீங்கள் எடுத்த முயற்சிகளில்அனுகூலம் உண்டு. விலகிச்சென்ற சொந்தங்கள் மனக்கசப்பு மாறி மகிழ்ச்சியோடு வந்திணைவர்.

பணிபுரியும் பெண்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைப்பதோடு, சம்பள உயர்வும் கிடைக்கலாம். குரு வழிபாடு நன்மையை வழங்கும்.

(தொடரும்)

### அதிவலுகொண்ட

# லேசர் தொழில் நுட்பத்தின் மூலம் சிறுநீரகக்கல்லை அகற்றி சாதனை

(கொழும்பு)

நாட்டில் அதிவலு கொண்ட லேசர் தொழில்நுட்பத்தின் ஊடாக சத்திர சிகிச்சை யொன்று களுத்துறை மாவட்ட நாகொட பொது வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது குறித்து கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இலங்கை மருத்துவ வரலாற்றில் இவ்வாறான சத்திர சிகிச்சையொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வைத்தியர் கலன பரண பல்லியகுருகே தலைமையிலான குழுவினர் ஒருநபரின் சிறுநீரகத்தில் 4 சென்ரிமீற்றர் நீளமான கல்லை 140 வோட் மின் வலுவில் லேசர் தொழில் நுட்பத்தின் ஊடாக, உடைத்து, சிறுநீரகத்தின் வழியாக வெளியேற்றினர்.

இதேவேளை, குறித்த நபரின் சிறுநீரகத்திலிருந்த் 8 அங்குல கல்லொன்று, சுமார் 7 வருடங்களுக்கு முன்னர் சத்திர சிகிச்சை மூலம் வெளியில் எடுக்கப்பட்டது.

இரண்டாவது தடவையாக கல்லை அகற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டதையடுத்து, புதிய தொழில்நுட்பம் இந்த சத்திர சிகிச்சைக்காக பயன்படுத்தப்பட்டதாக குறித்த வைத்தியர் குழாம் தெரிவித்துள்ளது. (ஜ-4)

# நாட்டு மக்களின் கருத்துக்களே என்னைத்தீர்மானிக்கும் பிரதான அளவுகோல்

## சமூக ஊடகங்கள் இல்லை என்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

**சமூக ஊடகங்களைக் கொண்டு தமது வெற்றியையோ அல்லது தோல்வியையோ நிர்ணயிக்க முடியாது. மக்களின் கருத்துக்கள் மூலமே தீர்மானிக்க முடியும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.**

ஜனாதிபதியாக பதவி ஏற்றுக்கொண்டு ஓராண்டு பூர்த்தியானதனை முன்னிட்டு நேற்று முன்தினம் நாட்டு மக்களுக்கு ஆற்றிய விசேட உரையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தமது எதிரிகளினால் சமூக ஊடகங்களில் பரப்பி வரும் பிரசாரங்களினால் தமது வெற்றி தோல்வியை நிர்ணயிக்க முடியாது எனவும், மக்களின் கருத்துக்களே



தமது வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் பிரதான அளவுகோல் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எந்தவிதமான தீவிரவாத செயற்பாடுகளும் மீண்டும் தலைதூக்கும் சாத்தியத்தை கட்டுப்படுத்தியுள்ளதாகவும், போதைப்பொருளைக் கட்டுப்படுத்த முறையான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாகவும் நாட்டு மக்கள் பாதாள உலகக் குழுக்களுக்கு இனியும் அஞ்சி வாழ வேண்டிய அவசியமில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# சுண்ணாம்புச் சுரங்கத்தின் விளைவே கண்டியில் நிலஅதிர்வு

(கண்டி)

விக்டோரியா நீர்த்தேக்க பள்ளத்தாக்கில் இடம்பெறும் சுண்ணாம்புச் சுரங்கத்தின் விளைவாகவே கண்டி திகன பகுதியில் நில அதிர்வு ஏற்பட்டுள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் புவிச்சரிதவியல் பீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் அதுல சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த "இரண்டு மாதங்களுக்கு முன்னர் இந்தப் பகுதியில் இதே போன்று நில அதிர்வு ஏற்பட்டிருந்தது.

இந் நிலையில், அந்த பகுதியில் சுண்ணாம்புக்குவாரி நடத்துவதை உடன் நிறுத்த வேண்டும் என்று கோரியிருந்தேன்.

ஆனால் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

இதுபோன்ற அதிர்வுகளை குறைத்து மதிப்பிட முடியாது என்றும், எனினும் விக்டோரியா நீர்த்தேக்கம் பாதிக்கப் படாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், அப்பகுதியில் சுண்ணாம்ப்பு சுரங்கத்தை நிறுத்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் கோரிக்கை விடுத்தார். (ஜ-4)

# பேனையுடன் செல்லுங்கள் பொலிஸாரின் அறிவுறுத்தல்

(கொழும்பு)

நாட்டில் எந்தவொரு வணிக இடத்திலும் அலுவலகங்களிலும் நுழையும் போது தங்கள் சொந்த பேனாவை எடுத்துச் சென்று பயன்படுத்துமாறு பொலிஸார் பொது மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது டன் இதன் மூலம் அவர்கள் தங்கள் விபரங்களை நுழைவாயிலில் உள்ள பதிவு புத்தகத்தில் பாதுகாப் பாக பதிவு செய்யமுடியும்எனப்பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

மேலும் வைரஸ் பரவுவதைத் தடுக்க வணிகங்கள் மற்றும் அலுவலகங்கள் அறிமுகப்படுத்திய பாதுகாப்பு நடைமுறைகளை புலனாய்வு அதிகாரிகள் கண்காணித்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அச்சுக் கலையின் ஆரம்பம்!

ஐயா, என்னுடைய நூல் வெளியீட்டு விழாவிற்கு அவசியம் நீங்கள் வரவேண்டும் என்று கூப்பிட்டார் ஒருவர்.எப்பொழுது வரவேண்டும் என்று கேட்டேன்.அடுத்த வாரம் என்றார்.சரி...புத்தகம் தயாராகி விட்டதா? என்றேன்.நாளைக்குத் தான் அச்சிற்கே கொடுக்கப் போகின்றேன்..என்றார்.

இது புத்தகம் அச்சிடுவதற்கு முன்னாடியே அழைப்பிதழை அச்சடித்துவிட்டீர்கள்? என்று கேட்டேன்.அதனால் என்ன? அந்தக் காலம் மாதிரியா இப்பொழுதெல்லாம்..அச்சுக்கலை எவ்வளவோ முன்னேறியாச்சு...லைனோ டைப், மோனோ டைப், போட்டோ டைப் செட், லேசர்...இப்படி என்னவோ வந்தாச்சு... இன்றைக்குக் கொடுத்தால் நாளைக்கே புத்தகம் தயார்...என்றார்.

இப்படி இந்த அளவுக்கு முன்னேயிருக்கின்றது.இந்த அச்சுக்கலை ஆரம்பத்திலே எப்படி இருந்தது தெரியுமா?

அந்தக் காலத்திலே காகிதம் என்றால் என்ன என்று தெரியாது..அப்படி ஒன்று கண்டுபிடிக்கப்படவே இல்லை..அப்பொழுதெல்லாம் எதையாவது ஒன்றை எழுத வேண்டும் என்றால் அதற்கு ஆட்டுத் தோலைத் தான் பயன்படுத்தியிருக்கின்றார்கள். கன்றுக்குட்டி தோல் கூட அதற்கு உபயோகப்பட்டிருக்கிறது. ஐரோப்பாவிலே இருந்த பாதிரியார்கள் தோலில் எழுதப்பட்ட புத்தகத்தைத் தயாரிப்பதில் தேர்ச்சி பெற்றிருந்தார்களாம்.

எகிப்து, மத்திய தரைக் கடல் ஓரத்திலே உள்ள நாடுகளில் எல்லாம் தோல் தான் எழுதுபொருளாக பயன்பட்டு வந்தது. ஆனால் எங்கள் நாட்டிலே ஓலைச் சுவடிகளை எழுதுவதற்குப் பயன்படுத்தினார்கள்.

எழுதுவதற்குத் தோலைப் பயன்படுத்தியவர்கள் பிறகு பேபைரஸ் என்கின்ற கோரைப் புல்லை அதற்குப் பயன்படுத்தலாம் என்பதை கண்டுபிடித்தார்கள். அந்தப் புல்லை கச்சிதமாக நறுக்க வேண்டியது, நன்றாக பதப்படுத்த வேண்டியது.பின்பு எழுத வேண்டியது. அவ்வளவு தான்.பேப்பர் என்கின்ற சொல்லே பேபைரஸ் என்பதிலிருந்து தான் வந்தது. அதன் பின்பு தான் காகிதம் வந்தது...இதை முதலிலே சீன நாட்டிலே தான் கண்டு பிடித்தார்கள்.

அது வந்து பிறகு அச்சு எந்திரம் கண்டு பிடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதைக் கண்டு பிடித்தவர் ஜேர்மன் அறிவியல் அறிஞர் ஜான் கூட்டன் பர்க். அச்சுக் கலைக்கு அடித்தளம் அமைத்தவர் அவர் தான். ஜேர்மனியிலே மெனின்ஸ் என்கின்ற ஊரிலே 1399 இலே பிறந்தார். அவருடைய மாமன் ஒருத்தர் உலோக வேலையில் வல்லவர். அவரிடம் அந்த வேலையைக் கற்றுக் கொண்டார். அதனுடன் வைரக் கற்களைப் பட்டை தீட்டுவதிலும் தேர்ச்சி பெற்றிருந்தார்.இளம் வயதிலே சும்மா இருக்க மாட்டாராம். எதைச் செய்தாலும் அதைத் திறமையாக செய்வாராம். அவர் தான் முதலிலே மர அச்சு எழுத்துக்களை உருவாக்கினார். அது மேலே மை தடவி பிரதிகள் எடுத்தார்.

அதன்பின்பு உலோக எழுத்துக்கள் முதலிலே காரீயம்...பின்பு இரும்பு... பின்பு கலப்பு உலோகம்..பிறகு அச்சடிப்பதற்கு எந்திரம் ஒன்றையும் உருவாக்கினார்.முதலிலே பைபிளை அச்சடித்தார். 1468 இலே அவர் இறந்து போனார்.

16ஆம் நூற்றாண்டிலே மேலை நாடுகளிலிருந்து மர எழுத்துக்களை கொண்டுவந்து தமிழ் நாட்டிலே கிறிஸ்தவ நூல்களை அச்சிட்டார்கள்.அப்பொழுதெல்லாம் அச்சகங்கள் போதிய அளவுக்கு இங்கே இல்லை. அதற்கு என்ன காரணம் என்றால்...

இந்தியர்கள் அச்சகங்களை நடத்தக் கூடாது என்று சட்டம். 1835 வரையில் அந்தச் சட்டம் நடைமுறையில் இருந்தது.


இந்த நிலையில் அங்கேயும் இங்கேயுமாக ஒன்று இரண்டு அச்சகங்கள் ஆரம்பமாகியது.1713 இலே தரங்கம் பாடியில் லூதரன் மிஷன் அச்சகம்....அதே ஆண்டிலே சென்னையிலே எஸ்.பி.சி.கே. அச்சகம்..இது இரண்டும் தான் இந்தியாவிலேயே முதன் முதலிலே தொடங்கப்பட்ட அச்சகங்கள். ஆட்டுத் தோலிலும் ஓலைச் சுவடியிலேயும் எழுதப்பட்ட எழுத்துக்கள்...இன்றைக்கு எங்கேயோ போயிட்டோம்...ஆனால் எங்கள் ஊரிலே எழுத்தாளர்கள் நிலைமை தான் ஒன்றும் சொல்லுகின்றது போல் இல்லை.

எங்கள் ஆள் ஒருத்தர் சொன்னார். சேர் நான் சொந்தத்தில் ஒரு அச்சு அலுவலகம் வைத்திருக்கின்றேன். அதனால் என்னுடைய படைப்புக்களை புத்தகமாக வெளியிடுவதாலே எனக்கு ஒன்றும் கஷ்டமில்லை.. வருடத்திற்கு ஒரு புத்தகம் எழுதி வெளியிட்டு விடுவேன்.

15 வருடமாக இலக்கிய உலகத்திற்கு இப்படி சேவை செய்து கொண்டு வருகின்றேன்.ஆனால் இந்த வருடம் தான்..வாசகர்கள் எனக்குப் பாராட்டு விழா நடத்தினார்கள் என்றார்.இந்த வருடம் அப்படி என்ன விசேடம் என்றேன்.இந்த வருடம் தான் நான் எந்தப் புத்தகமும் எழுதி வெளியிடாமல் இருந்தேன்..அதற்காகத் தான் இந்தப் பாராட்டு விழா என்றார்.

# டோக்கியோ ஒலிம்பிக்கில் பார்வையாளர்கள் கலந்து கொள்வர்

## சர்வதேச ஒலிம்பிக் நிர்வாகம்



2021 ஆம் ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக் போட்டியிகளில் பார்வையாளர்களால் கலந்து கொள்ள முடியும். என மிகுந்த நம்பிக்கை இருப்பதாக சர்வதேச ஒலிம்பிக் நிர்வகத்தின் தலைவர் தொமஸ் பாக் தெரிவித்துள்ளார்.

போட்டிகளைக் காண ரசிகர்கள் வருவதற்கு முன்பு தடுப்பூசி போடப்படுவதை உறுதி செய்வதில் சர்வதேச ஒலிம்பிக் நிர்வாகம் பெரும் முயற்சிகளை முன்னெடுக்கும் என்றும் தோமஸ் பாக் கூறினார்.

அடுத்த ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டிகளை எவ்வாறு நடத்த முடியும் என்பது குறித்து விவாதிக்க அவர் தற்போது ஜப்பானில் உள்ளார்.

2020 ஆம் ஆண்டுக்கான டோக்கியோ விளையாட்டுக்கள் முதலில் கடந்த ஜூலை மாதம் ஆரம்பமாக இருந்தது. ஆனால் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஒரு வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது.

சுமார் 20 நாடுகளைச் சேர்ந்த 11,000 இற்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க முன்னதாக திட்டமிடப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் 2020 ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டிகள் ஜூலை 2021 டோக்கியோவில் ஆரம்பமாகவுள்ளது. (நி-4)

# நடுவர்கள் பதவியுயர்வு



(கரணவாய்)

யாழ்.மாவட்ட வடமராட்சி கபடிச்சங்கத்தைச் சேர்ந்த 8 பேர் தேசிய நடுவர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். அண்மையில் கொழும்பில் இலங்கை கபடிச் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட எழுத்து மற்றும் செய்முறைப் பரீட்சைகளின் அடிப்படையில் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதில் யாழ்.மாவட்ட கபடிச்சங்கத்தலைவர் பா.முகுந்தன் கபடிச் சம்மேளனத்தின் தேசிய தொழில்நுட்ப அலுவலராக பதவி உயர்வு பெற்றதுடன் எஸ்.முரளிதரன், ஜி.முகுந்தன், எம். பிறேம்குமார் ஆகிய மூவரும் A தர நடுவர்களாகவும் வை.லக்கி, எஸ்.சுதர்சன், எஸ்.யுவிந்தன் மற்றும் பி.கலாபன் ஆகியோர் B தர நடுவர்களாகவும் பதவி உயர்வு பெற்றுள்ளனர். இவர்களில் முதல்முதலாக தமிழர் ஒருவரான பா.முகுந்தன் தேசிய தொழில்நுட்ப அலுவலராக தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (4-60)

# எல்.பி.எல்.தொடரை ஒளிபரப்புச் செய்யும் தொலைக்காட்சி அலைவரிசைகள் அறிவிப்பு

Sri Lanka Cricket

LPL T20

LANKA PREMIER LEAGUE 2020

2020 ஆம் ஆண்டுக்கான லங்கா பிறீமியர் லீக் தொடர் எதிர்வரும் 26 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

டிசெம்பர் 16 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்தத் தொடர், அம்பாந்தோட்டை, சூரியவெவ மகிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பு, கண்டி, காலி, தம்புள்ள மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளை பிரதிநிதித்துவப்படுத்தி ஐந்து அணிகள் கலந்துகொள்ளும் இந்தத் தொடரில் மொத்தமாக 23 போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்நிலையில், இந்தத் தொடருக்கான ஒளிபரப்பாளர்கள் உரிமையைப் பெற்ற தொலைக்காட்சி அலைவரிசைகளின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன்படி, இலங்கை சுயாதீனத் தொலைக்காட்சியான ஐ.ரி.என்., இங்கிலாந்தின் ஸ்கை ஸ்போர்ட்ஸ், பாகிஸ்தானின் ஜியோ மற்றும் பி.டி.வி (Geo and PTV) ஆகிய அலைவரிசைகள் உரிமையைப் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# பயிற்சியில் ஈடுபட்ட விமானம் மாயம்

## தேடும்பணி தீவிரம்



(தாய்பே)

தாய்வானில் பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அதிநவீன எப்-16 ரக போர் விமானம் மாயமான சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தாய்வானுக்கும், சீனாவுக்கும் இடையே பல ஆண்டுகளாக மோதல் நிலவி வருகிறது. சீனாவின் கட்டுப்பாட்டில் இருந்து சுதந்திரம் பெற்ற போதும் தாய்வானை தனது நாட்டின் அங்கமாகவே சீனா கருதி வருகிறது.

மேலும், தாய்வானை அச்சுறுத்தும் வகையில் அந்நாட்டின் எல்லைக்குள் அத்துமீறி சீனா தனது போர் விமானங்களை பறக்கச்செய்வதும் தினசரி நிகழ்வாகவே உள்ளது.

ஆனால், அமெரிக்காவின் ஆதரவு பெற்ற தாய்வான் போர் விமானங்கள் உள்ளிட்ட ஆயுதங்களை அந்நாட்டிடம் இருந்து கொள்முதல் செய்து வருகிறது.

குறிப்பாக அமெரிக்காவின் அதிநவீன போர் விமானங்களில் ஒன்றான எப்-16 ரக போர் விமானங்கள் தாய்வானிடம் 150 இற்கும் அதிகமான அளவில் உள்ளது.

இந்நிலையில், அந்நாட்டின் கிழக்குப்பகுதியில் உள்ள குவலியன் விமானப்படை தளத்தில் இருந்த எப்-16 ரக போர் விமானங்கள் நேற்று முன்தினம் வழக்கமான பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தன.

அப்போது, 44 வயதுடைய விமானியான கேணல் ஜியாங் பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த எப்-16 போர் விமானம் ரேடாரின் பார்வையில் இருந்து மறைந்தது.

மேலும், கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பையும் இழந்தது.

இதையடுத்து, மாயமான எப்-16 போர் விமானத்தை தேடும்பணியை தாய்வான் விமானப்படையினர் துரிதப்படுத்தியுள்ளனர். போர் விமானம் கோளாறு காரணமாக கட்டுப்பாட்டை இழந்து தென்சீன கடலில் விழுந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. ஆனாலும், விமானத்தை தேடும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. (நி-4)

# எல்.பி.எல்.இல் இந்திய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர்



2011 உலகக்கோப்பையை வென்ற இந்திய ஒருநாள் கிரிக்கெட் அணியில் இடம் பிடித்திருந்த முனாப் பட்டேல் லங்கா பிறீமியர் லீக்கில் விளையாடவுள்ளார்.


இலங்கை கிரிக்கெட் வாரியம் லங்கா பிறீமியர் லீக் என்ற பெயரில் இருபது-20 லீக்கை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த் தொடர் எதிர்வரும் 26 ஆம் திகதி ஆரம்பமாகிறது. இதில் ஐந்து அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

ஐந்து அணிகளில் கண்டி டஸ்கர் அணியும் ஒன்று. அந்த அணி இந்தியாவின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான முனாப் பட்டேலை ஒப்பந்தம் செய்துள்ளது. முனாப் பட்டேல் இந்திய அணிக்காக 13 டெஸ்ட், 70 ஒருநாள் மற்றும் 3 இருபது 20 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

ஏற்கனவே இர்பான்பதானை கண்டி டஸ்கர் அணி ஒப்பந்தம் செய்துள்ளது. தற்போது 2-வது வீரராக முனாப் பட்டேலை ஒப்பந்தம் செய்துள்ளது. (நி-4)

# கொரோனாவை ஒழிப்பதுடன் பொருளாதாரத்தையும் கட்டியெழுப்புவோம்

## பிரதமர் உறுதி





(கொழும்பு)

போரை விட கொரோனாவால் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள அழிவு மிகவும் மோசமானது என ஊடக சந்திப்பின் போது பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.


2015 ஆம் ஆண்டின் பின்னர் பின்தள்ளப்பட்டுள்ள இந்த நாட்டை மீளக் கட்டியெழுப்பும் பொறுப்புடன் கொவிட்-19 அனர்த்தத்தையும் வெற்றிகொள்ள வேண்டிய சவால் ஏற்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

சுற்றுலாத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

அதிலிருந்து மீளவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சுட்டிக்காட்டினார்.

கொரோனா நோயுடன் போராடுவதுடன் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி



## கருவறையின் தேவ இரகசியம்

(தொடர்ச்சி)

கருவறையில் ஒரே ஒரு விளக்கு தொங்க விட்டிருப்பார்கள். அல்லது விக்கிரகத்துக்கு பின்னால் ஒரு செயற்கை ஒளி வட்டத்தை ஏற்படுத்தி இருப்பார்கள். இவை தான் கருவறையில் உள்ள இறை ஆற்றல்களை வெளிப்பக்கத்துக்கு எகிறச் செய்கிறது.

தினம் தினம் இந்த இறை ஆற்றல்கள் திரண்டு வெளி வருகிறது. அதனால்தான் கருவறையில் பால், பஞ்சாமிர்தம், தயிர், சந்தனம், குங்குமம், விபூதி, எண்ணெய் என எந்தப்பொருள் கொண்டு அபிஷேகம் செய்தாலும் அவை நாற்றத்தை ஏற்படுத்துவதில்லை.

அதற்குப் பதில் கருவறையில் வைக்கப்படும் தண்ணீர் தீர்த்தமாக மாறுகிறது. கருவறை நைவேத்தியங்கள் மகத்துவம் பொருந்திய மருந்தாக மாறுவதற்கு இறை ஆற்றல்களே காரணமாகும்.

கருவறையில் மூலவருக்கு அபிஷேகம் செய்யப்படும் போதும் நைவேத்தியம் படைக்கும் போதும் திரை போட்டு மூடி விடுவார்கள். தீபாராதனை காட்டும்போது திரையை விலக்குவார்கள். இதிலும் விஞ்ஞான தத்துவமே பின்புலமாக உள்ளது.

கருவறையை திரை போட்டு மூடி இருக்கும் போது இறை ஆற்றல்கள் தேங்கி நிற்கும். திரை விலக்கப்பட்டு தீபம் காட்டப்பட்டதும் அந்த ஆற்றல்களை அப்படியே திரண்டு வந்து வெளியில் இரு பக்கமும் வரிசையில் நிற்பவர்கள் மீது அருள் வெள்ளமாகப் பாயும். இந்த இறை ஆற்றல்கள், அலைகள் நமது மூளையை சுத்தப்படுத்தி நம்மை புத்துணர்ச்சி பெறச் செய்யும். இதைக் கருத்தில் கொண்டுதான் சித்த சுவாதீனம் அடைந்தவர்களை கோவில் வளாகத்தில் கட்டி வைக்கும் வழக்கம் ஏற்பட்டது.

கோவிலில் தயாரிக்கப்படும் நைவேத்தியங்கள் சுவைமிக்கதாக மாறுவதற்கும் அபிஷேக நீர் நமது உடம்பில் பட்டதும் சிலிர்ப்பை ஏற்படுத்துவதற்கும் கருவறையில் தோன்றி ஆலயம் முழுவதும் பரவும் காந்த அலைகளே காரணமாகும். கருவறையில் உருவாகும் சக்தியானது இடமிருந்து வலமாக சுற்றுப்பாதையில் சுற்றுவதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். ஆனால் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் முன்னோர்கள் இதைக் கண்டுபிடித்து கருவறையை இடமிருந்து வலமாக நம்மைச் சுற்றி வைத்து விட்டனர்.

ஆண்கள் மேல் சட்டை அணியாமல் சுற்றினால் சக்தி அலைகள் நேரடியாக உடலுக்குள் புகுந்து நல்லது செய்யும்.

பொதுவாகக் கருவறை மூலவர் மூலம் ஆலயம் முழுவதும் காந்த சக்தி அலைகள் பிரம்ம முகூர்த்த நேரத்தில் மிக அதிகமாக பரவும். எனவே பிரம முகூர்த்தத்தில் சென்று முதல் ஆராதனையின் போது வழிபட்டால் அதிக நன்மை பெறலாம். இந்தக் காந்த அலைகள்தான் கோவிலின் பிரகாரத்தில் உள்ள சந்நிதிகள், கொடி மரம், பலி பீடம் போன்றவற்றை கருவறையுடன் "வயர்லஸ்" தொடர்பு போல இணைக்கின்றன. எனவே "பொசிட்டிவ் எனர்ஜி" பெற கருவறை வழிபாடு மிக மிக முக்கியமானது.

(முற்றும்)

# செய்தித்துளிகள்

## 15 பேர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறி செயற்பட்ட குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் 15 பேர் கைது செய்யப்பட்டனர்.

பாதுகாப்பு முகக்கவசம் மற்றும் சமூக இடைவெளியினை தவிர்த்து செயற்பட்ட குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதேவேளை தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறி செயற்பட்ட குற்றச்சாட்டில் கடந்த 30 ஆம் திகதி முதல் இதுவரை 312 பேர் கைது செய்யப்பட்டனர். இந்த நிலையில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

## ஸ்கைப்பில் றிசாத் சாட்சியம்

(கொழும்பு)

பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, சிறைபிடிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீன், சிறைச்சாலையிலிருந்து ஸ்கைப் தொழில்நுட்ப உதவியுடன் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு சாட்சியமளித்துள்ளார். உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் சம்பவம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் சாட்சியத்தையே அவர் இவ்வாறு வழங்கி வருகிறார். (ஜ-4)

## உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள் திருத்தப் பணிகள் ஆரம்பம்

(கொழும்பு)

2020 கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள் திருத்தப்பணிகள் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித இதனைத் தெரிவித்தார்.

கொழும்பு, களுத்துறை, கம்பஹா மாவட்டங்களை தவிர நாட்டின் ஏனைய மாவட்டங்களில் வைத்து விடைத்தாள் திருத்தப்பணிகள் இடம்பெறவுள்ளதாகவும் சுகாதார அமைச்சின் ஆலோசனைக்கமைய குறித்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 180 | 160 |
| உருளைக்கிழங்கு | 160 | 160 | 180 | 180 |
| பச்சைமிளகாய் | 180 | 140 | 160 | 160 |
| தக்காளி | 120 | 100 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 60 | 90 | 60 |
| கோவா | 60 | 80 | 80 | 80 |
| கரட் | 120 | 200 | 200 | 200 |
| பூசணி | 80 | 70 | 60 | 80 |
| புடோல் | 80 | 70 | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 280 | 280 | 280-320 | 300 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 180 | 200 |
| பாகற்காய் | 300 | 280 | 400 | 320 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 80 | 160 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 100 | 120 |
| பயற்றங்காய் | 320 | 280 | 400 | 300 |
| லீக்ஸ் | 80 | 100 | 100 | 100 |
| பீற்றூட் | 80 | 80 | 80 | 80 |
| கறிமிளகாய் | 250 | 240 | 240 | 240 |
| முருங்கைக்காய் | 250 | 200 | 200 | 200 |
| போஞ்சி | 250 | 170 | 240 | 280 |
| கத்தரிதம்புள்ள | 200 | 180 | 180 | 150 |
| கீரை - 1 பிடி | 60 | 50 | 60-70 | 60 |
| தேசிக்காய் | 200 | 200 | 180 | 280 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 85 | 75-80 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 300 | 250 | 250 |
| வெங்காயப்பூ | -- | 300 | -- | -- |
| முள்ளங்கி | 80 | 70 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 30 | 50 | 30 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 90 | -- | 100 |



# சிறுவர் அரங்கம்

## அடிமையான குதிரை

ஒரு குதிரைக்கும் கலை மானுக்கும் இடையில் சிறு பகை ஏற்பட்டதால் அக்கலைமானை ஒழித்துக் கட்ட எண்ணிய குதிரை ஒரு மனிதனின் உதவியை நாடியது.

அதன் வேண்டுகோளை ஏற்ற மனிதன் குதிரைக்குச் சேணமும், கடிவாளமும் போட்டான். அதன் மீது சவாரி செய்து கலைமானை விரட்டிப் பிடித்துக் கொன்றான்.

தனது பகைவன் ஒழிந்ததைக் கண்டு மகிழ்ந்த குதிரைக் கனைத்தது. தன் எதிரியை ஒழித்த மனிதனுக்கு நன்றி கூறியது.

தன் கடிவாளத்தை நீக்கித் தன்னை விடுவிக்கும்படி வேண்டியது.

குதிரையே, உன்னை விடுவிப்பதா, அது முடியவே முடியாது. நான் வசதியாகச் சவாரி செய்ய நீ எனக்கு மிகவும் பயன்படுவாய். ஆகையால் உன்னை விடுவிக்கவே மாட்டேன் என்று கூறிச் சிரித்தான்.

அன்று முதல் குதிரை, மனிதனுக்கு அடிமையாக இருக்கிறது. குதிரையின் வஞ்சம் தீர்ந்தது. ஆனால் அது தன் சுதந்திரத்தினை இழந்து அடிமையாகவே இருக்க வேண்டியதாயிற்று.

**நீதி :**
**பிறருக்கு கேடு நினைப்பவன் நிச்சயம் கெட்டுப்போவான்.**



# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## முதல் வெற்றி


30

புழுதியைக் கிளப்பிக் கொண்டு மாசிடோனியக் குதிரைகள் நடத்திய தாக்குதலில் கலகக்காரர்கள் சிதறி ஓடினார்கள், சின்னாபின்னமானார்கள்.

மேடி நாட்டுக் கலவரக்காரர்கள் படை மளமளவென சரியத் தொடங்கியது. தாக்குதல் கடுமையாக இருந்ததால் எதிரிகள் உயிர் பிழைப்பதே சிரமம் என்கிற அளவுக்கு நிலைமை போனது.

சில மணி நேரங்களில் கலவரம் அடங்கியது. இல்லையில்லை அடக்கப்பட்டது. உபயம்: அலெக்சாண்டர். முதல் வெற்றி. தந்தைக்குக்கூட தகவல் தெரிவிக்காமல் நடத்திய முதல் போரில் வெற்றி.

உற்சாகத்தில் வானத்தை நோக்கி கடவுளுக்கு நன்றி சொன்னார் அலெக்சாண்டர். உடல் சிலிர்த்தது.



அலெக்சாண்ட்ராபொலிஸ்

மண்டியிட்டு அமர்ந்து மண்ணை எடுத்து உள்ளங்கையில் வைத்துப் பார்த்தார். ஒரு முறை நுகர்ந்தார். பரவசம் பேரானந்தம்.

வெற்றியின் வாசத்தை முதன்முதலில் நுகர்ந்தது அப்போது தான்.

முதல் காதல், முதல் முத்தம், முதல் ஸ்பரிசம், முதல் வெற்றி எல்லாமே பரவசம் தரக்கூடிய விடயங்கள் அல்லவா? இன்னும்... இன்னும் வேண்டும்.

நிறைய வேண்டும். ஒவ்வொன்றாக. அடுத்தடுத்து மனதுக்குள் சொல்லிக் கொண்டார்.

தன்னுடைய வெற்றியைப் பதிவு செய்ய விரும்பினார் அலெக்சாண்டர். மேடி நாட்டின் பெயரை மாற்றிவிட்டு தன்னுடைய பெயரைச் சூட்டினால் என்ன? எண்ணம் வந்துவிட்டது. இதற்கு மேல் என்ன வேண்டும்? வைத்துவிட்டார்.

நாட்டின் பெயர் அலெக்சாண்ட்ரா பொலிஸ் (Alexandropolis) பொலிஸ் என்றால் நகரம் என்று அர்த்தம். முகத்தில் உற்சாகம் கொப்பளிக்க குதிரையில் ஏறிப் புறப்பட்டார் அலெக்சாண்டர்.

வெற்றி வீரனை வரவேற்பதற்காக மாசிடோனிய எல்லையிலேயே பொதுமக்கள் குழுமியிருந்தார்கள். வெற்றிவீரர் அலெக்சாண்டர் வாழ்க.

வாழ்த்துக் கோசங்கள் அலெக்சாண்டரின் காதுகளுக்கு இனிப்பு சாப்பிடுவதுபோல இருந்தது.

தந்தைக்கு விடயம் தெரிந்தால் எவ்வளவு குதூகலிப்பார்?

(தொடரும்)

உலக வரலாற்றில் வலிமையே நியாயத்தை உருவாக்குகிறது என்று சொல்கிறார்கள். நம்முடைய காலத்தில் நியாயமே வலிமையை உருவாக்குகிறது என்று மாற்றிக் காட்ட வேண்டும். – லிங்கன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் இனத்தை தொடர்ந்து வஞ்சிக்க நினைக்காதீர்கள்

எதிர்வரும் நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் நாள். விடுதலைப் போராட்டத்தில் ஆகுதியான மாவீரர்களை நினைவுகூருகின்ற நாளாக அதனைத் தமிழ் மக்கள் பிரகடனம் செய்துள்ளனர்.

இந்த மண்ணில் விடுதலைப் போராட்டம் நடந்ததை எவரும் மறப்பதற்கும் மறுப்பதற்கும் இல்லை.

விடுதலைப் புலிப் போராளிகளுக்கும் அரச படைத்தரப்புக்குமிடையே நடந்த சண்டையில் போராளிகளும் படைத்தரப்பினரும் உயிரிழுந்தனர் என்பதும் இங்கு உண்மைத் தகவல்கள்.

விடுதலைப் புலிகள் பலத்துடன் இருந்த காலத்தில், அவர்களுடன் இலங்கை அரசு பேச்சுவார்த்தை நடத்தியது.

இந்தப் பேச்சுவார்த்தை உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமாக நடந்தபோது, சமாதானத்துக்கான பேச்சுவார்த்தையாக அது பகிரங்கப் படுத்தப்பட்டது.

தவிர, யுத்த காலத்தில் விடுதலைப் புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்ட படையினரை விடுவிப்பதற்காகவும் படையினரால் பிடிக்கப்பட்ட போராளிகளை மீட்பதற்காகவும் படையினரும் விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தை நடத்தி கைதிகளைப் பரிமாற்றம் செய்த சம்பவங்களும் நடந்தன.

கால நீட்சியும் பூகோள அரசியல் மாற்றங்களும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்துக்குப் பாதகமாக அமைந்ததுடன் அண்டை நாட்டுப் பகைமையும் சேர்ந்து விடுதலைப் புலிகள் அமைப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தன.

இதனை போரின் வெற்றியாக அரசாங்கம் கொண்டாட, தமிழ் மக்கள் தங்களின் பலத்தை இழுந்து துன்பத்துக்கு ஆளாகினர்.

இங்கு, விடுதலைப் புலிகள் அரசாங்கத்தை எதிர்த்துப் போர் நடத்தியதாகப் பார்ப்போர்; அதற்கான காரணம் என்னவென்று இம்மியும் சிந்தித்திலர்.

உண்மையில் இந்த நாட்டில் தமிழ் மக்கள் திட்டமிட்டு நசுக்கப்பட்டனர். கல்வி, பொருளாதாரம் என அனைத்து வகையிலும் வஞ்சிக்கப்பட்டனர்.

காலத்துக்குக் காலம் அவர்கள் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது.

இந்நிலையில்தான் தமிழ் இனம் தனது எதிர்கால வாழ்வு பற்றிச் சிந்தித்தபோது, அகிம்சைப் போராட்டங்களை தமிழ் அரசியல் தலைவர்கள் முன்னெடுத்தனர்.

அவை அனைத்தையும் பேரினவாதத் தீ எரித்துவிட, சேர்ந்து வாழ்வதற்கு நாங்கள் தயாராக இருந்தாலும் பேரினவாதிகள் தயாரில்லை என்ற கட்டத்தில், பிரிந்து வாழ்வதே வழி என்று தமிழ் இனம் முடிவு செய்தது. இதுவே உண்மையும் சத்தியமுமாகும்.

நிலைமை இதுவாக இருக்கையில், மாவீரர்களை நினைவுகூருவது கூடத் தடுக்கப்படலாம் என்ற நிலைமை எம் இனத்தின் நினைவேந்தல் உரிமையை நிராகரிப்பதாகும்.

ஆக, தமிழ் இனத்தைப் பழி தீர்ப்பது என்ற எண்ணத்தை விடுத்து ஒரு சுமுகமான சூழமைவை ஏற்படுத்துவது அரசாங்கத்தின் தார்மீகக் கடமையாகும்.

### யாருடன் போரிடுவதற்கு

# பாதுகாப்பு அமைச்சுக்கு அரசாங்கம் அதிகளவு நிதியை ஒதுக்கியுள்ளது

## பாராளுமன்றில் நீதியரசர் விக்னேஸ்வரன் கேள்வி

(கொழும்பு)

நாட்டின் அவசியமான துறைகளுக்கு நிதி ஒதுக்க வேண்டிய நேரத்தில் பாதுகாப்பு அமைச்சிற்கு அளவுக்கு அதிகமான நிதியை ஒதுக்கியுள்ளதன் மூலம் அரசாங்கம் இன்னொரு யுத்தத்தை எதிர்பார்க்கின்றதா என சபையில் கேள்வி எழுப்பிய தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவ்வாறு ஒரு யுத்தம் என்றால் அது தமிழர்களுடனா, இந்தியாவுடனா அல்லது மேற்கு நாடுகளுடனா எனவும் வினவினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற 2021 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

எதற்கான யுத்த கால வரவு - செலவு திட்டமொன்றை சமாதான காலங்களில் முன்வைத்துள்ளீர்கள். என்னைப் பொறுத்தவரை இந்த வரவு - செலவு திட்டத்தில் குறைந்த நிதியை பாதுகாப்பிற்கும், அதிகளவு நிதியை நுண்பொருளாதார மற்றும் நடுத்தர வர்த்தக செயற்பாடுகளுக்கும் ஒதுக்கியிருக்க வேண்டும்.

நீங்கள் உங்கள் முகத்துடன் கோபித்துக் கொண்டு உங்கள் மூக்கை வெட்டப் பார்க்கின்றீர்கள். நாட்டின் ஒரு சாராரை சந்தேகக் கண் கொண்டு பார்ப்பதால் தான் போர்க் கருவிகள், பீரங்கிகள், தற்பாதுகாப்பு கவசங்களை வாங்கிக் குவிக்கின்றீர்கள்.

காலாட் படைகளை அதிகரிக்கின்றீர்கள். பெரும்தொகை கடற்படை உபகரணங்களை வாங்குகின்றீர்கள். இதுவரை கண் மண் தெரியாமல் வாங்கிக் குவித்ததால் தானே எமது தேசியக் கடன் இந்தளவுக்கு உயர்ந்துள்ளது என்றார்.

(ம-3)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### ஞானம்- ஒரு சுமையாக

ஞானம் ஒரு சுமை, களங்கமில்லா மனத்தை இழக்கச் செய்யும் போது

ஞானம் ஒரு சுமை, வாழ்வோடு அது இணையாத போது

ஞானம் ஒரு சுமை, அது மகிழ்ச்சி அளிக்காத போது

ஞானம் ஒரு சுமை, நீங்கள் அறிவாளி எனும் எண்ணத்தை அது உங்களுக்குத் தரும் போது

ஞானம் ஒரு சுமை, உங்களுக்கு அது விடுதலை உணர்வைத் தராதபோது

ஞானம் ஒரு சுமை, நீங்கள் தனிச்சிறப்புடையவர் எனும் உணர்வு உங்களுக்குள் தோன்றும் போது

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

ஆகவே உயிர்களைக் கொன்ற பாவம் தின்பதனால் போகும் என்பது ஒரு சிறிதும் பொருந்தாது. ஒரு சிலர் நான் கொல்வதில்லை. கடையிலிருந்து வாங்கிச் சாப்பிடுகின்றேன் என்பார்கள்.

இதுவும் பிழையான கருத்தாகும். வாங்குவோர் பொருட்டே அவன் கொல்கின்றான்.

திருவள்ளுவர் கொல்லாமை என்று ஓர் அதிகாரமும் கூறியிருக்கின்றார்.

"கொல்லாமல் கொன்றதைத் தின்னாமல் சூத்திரம்
கோள் கரவு கல்லாமல்..." - பட்டினத்தார்.

இவ்வாறு எத்தனை பிரகாரங்களாகப் பார்த்தாலும் ஊன் என்பது மிகப்பெரிய பாவமாகும்.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** உரும்பிராய், மருதனார் மடம் விவசாயப்பண்ணை, அண்ணா பாம், அங்கிலிப்பாய், மாலுசந்தி, அல்வாய், நாவலடி, வியாபாரிமூலை, இன்பருட்டி, காந்தியூர், மந்திகை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, சுப்பர் மடம் மரின்வெல்த் ஐஸ் தொழிற்சாலை, ஸ்ரீலங்கா ரெலிக்கொம் கரவெட்டி, காரைநகர், ஆலடி, வலந்தலை, மருதபுரம், கருங்காலி, கோவளம், வட்டுக்கோட்டை, அராலி பிரதேசம், அன்னாங்கை பிரதேசம், குமரக் கோட்டம் பிரதேசம், கோண்டாவில் CTB depot பிரதேசம் ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** வித்தியாபுரம், தட்டையார்மலை, முத்து விநாயகபுரம், முத்தையன் கட்டு, கனகரட்ணபுரம், 13 SLNG முத்தையன்கட்டுகுளம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** புளிதறித்த புளியங்குளம், செக்கட்டிபிலவு, பம்பைமடு, சாளம்பைக்குளம் புது வீட்டுத்திட்டம், பம்பைமடு பல்கலைக் கழகம், வவுனியா பல்கலைக்கழகம், சாளம்பைக் குளத்திலிருந்து குருக்கள்புதுக்குளம்வரை, பூவரசங்குளத்திலிருந்து செங்கற்படை, வேளாங்குளம் கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில்** உயிலங்குளத்திலிருந்து திருநாவற்குளம், கமலாம்பிகை அரிசி ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2020

"மரங்களின் மீது கரிசனை கொண்ட கடவுள் அவற்றை வரட்சி, நோய்கள், பனிச்சரிவுகள், ஆயிரமாயிரம் சூறாவளிகள் மற்றும் கடும் வெள்ளப் பெருக்குகளில் இருந்து காப்பாற்றினாலும் முட்டாள்களிடம் இருந்து மட்டும் அவரால் அவற்றைக் காப்பாற்ற முடிய வில்லை."
-ஜோன் மூர் (அமெரிக்க இயற்கையியலாளர்)

## அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### தேங்காய் தீபம் ஏற்றுவதனால் ஏற்படும் நன்மைகள் எவை?

தேங்காய் தீபம் ஏற்றுவதனால் கிடைக்கும் நன்மைகள் என்னென்ன என்பதை பற்றி பார்ப்போம்.

பண ரீதியான வில்லங்கமான விடயங்களில் மாட்டிக் கொண்டு தவிப்பவர்கள் வீட்டின் பூஜை அறையில் சுக்கிர ஹோரையில் திங்கட் கிழமையில் தேங்காய் தீபத்தை ஏற்றி வழிபடுவார்கள்.

வேலை இல்லாதவர்கள் வேலை கிடைக்கவும், குழந்தை இல்லாதவர்கள் குழந்தை பாக்கியம் பெறவும், அம்மன் போன்ற பெண் தெய்வங்களுக்கு இரண்டு தேங்காய்களை உடைத்து தீபம் ஏற்றி வழிபடுவார்கள்.

தேங்காய் தீபம் ஏற்றும் பொழுது தேங்காய் உள்ளே நெய் ஊற்ற வேண்டும். தேங்காய் தீபத்தில் நெய் தவிர வேறு எந்த எண்ணெய்களையும் பயன்படுத்துவது கிடையாது.

திருமண தடை நீங்கவும், தொழில் வளம் சிறக்கவும், நல்ல வரன் அமையவும், வேண்டுதல்கள் விரைவாகவும் பலிக்கும்.

# வரவு-செலவுத்திட்ட உரை- 2021




**உற்பத்தித் தொழிற்பாடு மற்றும் கொடுக்கல்- வாங்கல்களுக்காக போதியளவில் பணம் மற்றும் கடன் வசதிகள் மக்களைச் சென்றடையக் கூடியவாறு வங்கி மற்றும் நிதிமுறைமைகளை பலப்படுத்தும்.**

அரசாங்கத்தின் வரவுக்கும் செலவுக்கும் இடையிலான தற்போதைய 9 சதவீத இடைவெளியை 4 சதவீதத்திற்குக் குறைப்பதும் தேசிய வருமானத்தில் 90 சதவீதமான அரசாங்கக் கடனை 70 சத வீதத்திற்கு குறைப்பதும், வெளிநாட்டுக் கடன் பெறுகைகள் காரணமாக கடன் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள இடர் நிலைமைகளை குறைப்பதும் கட்டாயமாக செய்ய வேண்டியுள்ளது.

உற்பத்தித் தொழிற்பாடு மற்றும் கொடுக்கல்- வாங்கல்களுக்காக போதியளவில் பணம் மற்றும் கடன் வசதிகள் மக்களைச் சென்றடையக் கூடியவாறு வங்கிமற்றும் நிதிமுறைமைகளை பலப்படுத்துவதும், நிதி மற்றும் திரவ நிலைமையை முகாமை செய்வது தொடர்பாக இலங்கை மத்திய வங்கியின் நிதிக் கொள்கைகள் தொடர்பாக புதிய கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டுமென நாம் நம்புகிறோம்.

உள்ளூர் உற்பத்தி வளங்களுக்கு பெறுமதி சேர்க்கின்ற ஏற்றுமதி பல்வகைப்படுத்தலுக்கு ஊடாக வெளிநாட்டு சம்பாத்தியத்தை அதிகரிப்பதும் இறக்குமதி மீது ஆழமாகத் தங்கியிருப்பதை குறைத்து, வெளிநாட்டு வர்த்தகப் பற்றாக் குறையைக் குறைத்துக் கொள்கின்றவாறு வர்த்தகம் மற்றும் உற்பத்தித் தொழிற்பாடுகளை கையாள வேண்டியுள்ளது.

சுற்றுலா, வெளிநாட்டுவேலை வாய்ப்பு துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் மூலமான தேறிய இலாபத்தை அதிகரித்தல் முதலான நடவடிக்கைகளை வர்த்தகப் பற்றாக் குறையை முகாமை செய்வதற்கு சமாந்தரமாக மேற்கொள்ள வேண்டியுள்ளது.

பரந்த கிராமிய அபிவிருத்தியூடாக வறுமையை ஒழிப்பதை இலக்காகக் கொண்ட தொழில் வாய்ப்பு மற்றும் வாழ்வாதாரங்களை அதிகரித்தல் அதேபோன்று சுகாதாரம், கல்வி மற்றும் சமூக சேம நலன் என்பவற்றை விஸ்தரிக்கும் அபிவிருத்தி பிரவேசமொன்றை நோக்கி நாம் செல்ல வேண்டும்.

## வெளிநாட்டுக் கடன் பயன்பாடு

வெளிநாட்டுக் கடன் நிதி மூலம் வருடாந்தம் செயற்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை விரைவாக அதிகரித்துள்ள போதிலும், ஐ.அ.டொ 6000 மில்லியனைவிட அதிக பெறுமதியைக் கொண்டுள்ள இக் கருத்திட்டங்கள் குறிப்பிடத் தக்களவு முன்னேற்றத்தைக் காட்டவில்லை.

கருத்திட்ட திட்டமிடல் செயன்முறையினை மற்றும் சாத்தியவள ஆய்வுகளை மேற்பார்வை செய்தபோது அந்நிகழ்ச்சித் திட்டங்கள் அரச முதலீட்டு முன்னுரிமைகளிலிருந்து விலகியிருந்தமை பிரதான குறைபாடாகக் காணப்பட்டது.

கருத்திட்டச் செலவு மற்றும் அமுலாக்கத்திற்காக எடுக்கும் காலம் அதிகரித்தல் காரணமாக குறைந்த பலனே கிட்டியுள்ளது. எனவே, வெளி நாட்டுக் கடன் மற்றும் படுகடன் கடன் சேவைகள் அதிகரித்ததனால் உற்பத்தி விளைவு பெருக்கமுடைய எனினும் குறைந்த செலவுடன் மேற்கொள்ள முடியுமான கருத்திட்டங்களுக்கு நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டதுடன் அரச முதலீடுகளுக்கு நிதியளிப்பதில் திறைசேரி செயற்பாட்டு நடவடிக்கைகள் மோசமாக பாதிக்கப்பட்டமை அவதானிக்கப்படுகின்றது.

இக்கடன் நிதியை "சுபீட்சத்தின் நோக்கு" சமூகப் பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் இனங் காணப்பட்டுள்ள முன்னுரிமைகளின் அடிப்படையில் மீள் ஒழுங்குபடுத்துவதற்கு அல்லது மீள் ஒதுக்கீடு செய்வதற்கு நாம் முன்னுரிமை கொடுத்துள்ளோம்.

இதற்காக கொடை வழங்கும் நிறுவனங்கள் காட்டும் ஒத்துழைப்பை நாம் பெரிதும் பாராட்டுகின்றோம். தற்போது காணப்படும் கடன் வசதிகளுடன் கொவிட் - 19 நோய்த் தடுப்பு, குடிநீர் வழங்கல், கிராமிய பாதை அபிவிருத்தி, கிராமிய சுகாதார சேவைகளை விரிவுபடுத்தல், தாய் - சேய் போசணை மட்டத்தினை மேம்படுத்தல், மாணவர்களை தொழிற்கல்வியின்பால் ஊக்குவித்தல் என்பவற்றுக்கு நாம் முன்னுரிமை வழங்கியுள்ளோம்.

மேலும், பாரம்பரிய கைத்தொழில்களுக்கு புதிய பெறுமதி சேர்ப்பு, புதிய வியாபார முயற்சிகளை ஆரம்பிப் பதற்காக இளைஞர்களுக்கு ஆரம்ப மூலதனத்தை வழங்குதல், பண்ணைகளின் அபிவிருத்திக்காக புதிய தொழில் நுட்பங்களை அறிமுகம் செய்தல், புதுப்பிக்கக் கூடிய சக்தித் துறையின் கொள்ளளவினை மேம்படுத்தல், நிதி மற்றும் மூலதன சந்தையில் மறுசீரமைப்புகளை மேற்கொள்ளல் போன்ற முன்னுரிமைத் துறைகளுக்கு ஏற்கனவே செயற்படுத்தப்படு கின்ற கடன் திட்டங்களுக்கு ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இதற்கமைவாக, உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை என்பவற்றுடன் உடன்பட்டவாறு வருடாந்தம் பயன்படுத்த திட்டமிடப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் மாத்திரம் ஏறக்குறைய ஐ.அ.டொ 1,400 மில்லியனாகும்.

இதற்கு மேலதிகமாக, இருதரப்பு அபிவிருத்தி கடன்களாக ஏறக்குறைய ஐ.அ.டொ 400 மில்லியனைப் பெற்றுக் கொள்வதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இக் கருத்திட்டங்களில் பெரும்பாலானவை மிகக் குறைந்த இறக்குமதி உள்ளடக்கத்தினைக் கொண்டுள்ளன என்ற வகையில், இவ்விடயம் வெளிநாட்டு நாணய முகாமைத்துவத்தில் சாதகமான விளைவுகளையே ஏற்படுத்துமென நான் நம்புகின்றேன்.

தொழில்நுட்ப மற்றும் விசேட தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாக கடன் மூலங்களினூடாக செலவீனத் தேவைகளின் 65 சதவீதத்திற்கு நாம் நிதியளிப்போம்.

சிறந்த ஒருங்கிணைப்பு மற்றும் செலவீனக் குறைப்பினை உறுதிப்படுத்துவதற்கு வெளிநாட்டு நிதியளிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் கருத்திட்ட அலுவலகங்களைத் தாபிப்பதனை வரையறுக்கும் அதேவேளை, குறித்த நிறுவனங்களின் நிகழ்ச்சித்திட்டங்களாக செயற்படுத்தப்பட வேண்டும்.

பல்வேறு அமைச்சுக்கள் உள்ளடக்கப்பட்டுள்ள பொருளாதாரக் கொத்தணிகளின் முன்னுரிமைகளுக்கேற்ப வெளிநாட்டுக் கடன்கள் பெற்றுக் கொள்ளப்படும். பொது முதலீட்டு நிதியளிப்பு உபாயமானத்தின் பிரதான விடயம் யாதெனில், கிராமிய பொருளாதாரத்திற்கு வழிவகுக்கின்ற தேசிய உட்கட்டமைப்பு அபிவிருத்தியினைச் செயற்படுத்துவதற்கு சாத்தியமான வகையில் உள்நாட்டு நிதியினைப் பயன்படுத்துவதாகும்.

## வரிக் கொள்கை

அரசாங்கத்தின் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டவாறு வரி செலுத்துநர்களுக்கு சிறந்த வசதியினை வழங்குவதற்கும் வரி நிர்வாகத்தினை வினைத்திறன்மிக்கதாக மாற்றும் வகையிலும் 2020 ஜனவரியிலிருந்து வரிக் கொள்கையினை அரசாங்கம் இலகுபடுத்தவுள்ளது. பொருளாதார மறுமலர்ச்சியின் பிரதான நோக்கம் வியாபாரங்களை மிகத் தீர்க்கமான ஸ்திரத் தன்மையுடன் பேணும் வகையில் அடுத்த 5 வருடங்களுக்கு எவ்வித மாற்றமுமின்றி நிலைத்திருக்கும் வரிக் கொள்கையொன்றாகும்.

எனவே, மாதமொன்றுக்கு ரூபா 25 மில்லியனுக்கு அதிக புரள்வினைக் கொண்ட இறக்குமதி மற்றும் பொருட்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள அல்லது வங்கித் தொழில், நிதி மற்றும் காப்புறுதித் துறைகள் தவிர்ந்த சேவை வழங்கல் வியாபாரங்களுக்கு பெறுமதி சேர் வரியினை 8 சதவீதமாக பேணுவதற்கு நான் முன் மாழிகின்றேன்.

பல்வேறு நிறுவனங்களினால் வேறுபட்ட சட்டங்களின் கீழ் விதிக்கப்படுகின்ற மொத்த வரி மற்றும் அறவீடுகளின் வருமானத்தில் 50 சதவீதமாகக் காணப்படும் மதுசாரம், சிகரெட்டுகள், தொலைத் தொடர்பு சூதாட்டம், மற்றும் வாகனங்கள் மீதான வரிகள் போன்ற பல்வேறு பண்டங்கள் சேவைகள் வரிகளுக்குப் பதிலாக, நிகழ்நிலை முகாமை செய்யப்படும் **(online-managed)** தனியான ஒற்றை விசேட பொருட்கள் மற்றும் சேவைகள் வரியினை அறிமுகப்படுத்துவதன் மூலம் வரிசேகரிப்பின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு நான் முன் மொழிகின்றேன்.

இவ்வாறான திருத்தங்களின் நோக்கம், மதுவரிக் கட்டளைச் சட்டம் போன்ற விசேட சட்ட ஏற்பாடுகளின் கீழ்வரும் நிறுவனங்களை சட்டவிரோத மதுபான மற்றும் சிகரட்டுகளின் விற்பனை மூலம் ஏற்படும் வருமான இழப்பினைத் தடுப்பதற்கான ஒழுங்குறுத்துகை விடயங்களில் அதிக கவனம் செலுத்தி அரசாங்கத்துக்கு உதவுமாறு பணிப்பதாகும்.

2020 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து இலகுபடுத்தப்பட்ட வரி முறைமையொன்று அமுலில் இருப்பதுடன், நிகழ்நிலை வரி நிர்வாகத்திற்கு ஏற்பாடு செய்யும் வகையில் வரிச் சட்டங்களைத் திருத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. உள்நாட்டு இறை வரித் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் பொருளாதார சேவைக் கட்டணம் மற்றும் தேசக் கட்டுமான வரி போன்ற வரிகளின் நிலுவைகளை வரி செலுத்துநர்களின் நிதி நிலைமைக்கேற்ப உடன்பட்டவாறு சலுகைக் கட்டணத் திட்டமொன்றின் கீழ் முழுமையாகச் செலுத்தித் தீர்ப்பதற்கு முன் மொழியப்படுகின்றது.

மேலும், 2021 ஏப்ரல் 21 ஆம் திகதியிலிருந்து கம்பனிகள் அனைத்தும் அவற்றினது வரிகளை இலத்திரனியல் கோவை **(E-Filing)** முறையில் சமர்ப்பித்தல்.

அத்துடன் வரி மற்றும் வரி தொடர்பான கொடுக்கல்-வாங்கல்களின் போது, வரி செலுத்துநர் அடையாள இலக்கத்தை **(TIN)** பயன்படுத்தல் என்பவற்றைக் கட்டாயமாக்கும் வகையில் வரிச் சட்டங்கள் திருத்தப்படும். வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் வரிகளைக் கணக்கீடு செய்கின்ற போது எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புகள் மற்றும் சந்தேகத்திற்கிடமான கடன்கள் என்பவற்றுக்கான ஏற்பாடுகளுடன் சிறந்த வெளிப்படையான முகாமைத்துவத்தினை உறுதிப்படுத்துவதற்கு உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ் தேவையான அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு நான் முன் மொழிகின்றேன்.

மேலும், உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழான தீர்ப்புகள் மற்றும் வரி நிர்வாக தீர்மானங்களுக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்ட மேன் முறை யீடுகளின் தீர்ப்புகளைச் செயற் படுத்துவதற்கு குறிப்பீடு செய்யப்பட்ட காலவரையறையினைத் தாபித்தல் தொடர்பான சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

வரிமேன் முறையீட்டினைத் துரிதமாக தீர்ப்பதற்கு விஷேட வரி மேன் முறையீட்டு நீதிமன்றம் ஒன்றினை உருவாக்குவதற்கு முன்மொழிகின்றேன்.

சம்பளங்கள், வாடகைகள், பங்கிலாபங்கள் அல்லது ஏனைய வருமான மூலங்களினூடாக மாதமொன்றுக்கு 250,000 ரூபாவிற்கு அதிகமாக உழைப்பவர்களுக்கு ஆள் சார் வருமான வரி ஏற்புடையதாகும். வாடகை, வட்டி மற்றும் பங்கிலாபங்கள் மீதான நிறுத்தி வைத்தல் வரி மற்றும் உழைக்கும் போது செலுத்தும் வரி **(PAYE)** என்பன ஒழிக்கப்பட்டுள்ளன. (தொடரும்)

## பாடசாலைகள்...

23ஆம் திகதி ஆரம்பிக்க தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

6ஆம் தரம் முதல் 13ஆம் தரம் வரையான வகுப்புகளுக்கே பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுகாதார நடைமுறையை பின்பற்றி பாடசாலைகளை நடத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-3)

## தேசிய ரீதியில்...

ளிக்கு மேல் பெறுபேறுகளைப் பெற்று புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

நல்லூர்க் கோட்டத்தைச் சேர்ந்த 338 மாணவர்களும் யாழ்ப்பாணக் கோட்டத்தைச் சேர்ந்த 281 மாணவர்களும் கோப்பாய்க் கோட்டத்தைச் சேர்ந்த 139 மாணவர்களும் இதில் அடங்குவர்.

இதேவேளை யாழ்.வலயத்தில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 2 ஆயிரத்து 565 மாணவர்கள் தேர்ச்சி மட்டத்தைத் தாண்டியுள்ளனர்.

இது 91.8 வீதம் என்ற உயரிய பெறுபேறு என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-3)

## 4 பேர் உயிரிழப்பு...

-19 நோயால் மேலும் 4 பேர் உயிரிழந்துள்ளனர் என்று நேற்று வியாழக்கிழமை இரவு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் நாட்டில் கோவிட் -19 நோயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 73ஆக அதிகரித்துள்ளது.

மினுவாங்கொட - பேலியகொட கொரோனா பரவல் கொத்தணியை அடுத்து கடந்த 6 வாரங்களில் 60 பேர் உயிரிழந்துள்ளனர்.

நாட்டில் நேற்றும் 473 பேருக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் நாட்டில் ஜனவரி மாதம் முதல் நேற்று வரை 18 ஆயிரத்து 839 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-3)

## மாவீரர் நினை...

மன்னார் நீதிமன்றத்தில் 5 பேருக்கும், வவுனியா நீதிமன்றத்தினால் 8 பேருக்கும் எதிராக அமுலாகும் வகையில் இந்த தடையுத்தரவு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த தடையுத்தரவு தொடர்பிலான அறிவிப்பு அடங்கிய ஆவணங்கள், பிரதிவாதிகளிடம் கையளிக்கவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரத்தில் மாவீரர் நாளை முன்னிட்டு பலரும் நினைவேந்தல்களை செய்யலாம் என்ற காரணத்தால் அதற்கெதிராக தடையுத்தரவை வழங்கும்படி பொலிஸார் கோரிக்கை முன்வைத்திருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (ம-3,285)

## உயிரிழந்த...

தப்பியோடிய கைதிக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சிறைச்சாலையில், விளக்கமறியல் உத்தரவின் பின்னர் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 5 கைதிகள் கண்டி - போகம்பரை பழைய சிறைச்சாலையில் இருந்து தப்பியோட மேற்கொண்ட முயற்சியின் போது, ஒரு கைதி உயிரிழந்ததுடன் மற்றொருவர் காயமடைந்திருந்தார்.

இவ்வாறு உயிரிழந்த கைதிக்கும் தப்பியோடிய கைதிக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-3)

## பண்ணாகம்...

இச்சம்பவம் நேற்று வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பண்ணாகம் விசுவத்தனைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் யாருமில்லாத வேளை பட்டப்பகலில் வீட்டுக் கதவினை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் வீட்டில் மறைத்து வைக்கப்பட்ட 16 பவுண் நகையினைத் திருடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸார் மோப்பநாயின் உதவியுடன் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,17)

## வேலையற்ற...

முயற்சியை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. மனிதவள மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் ஊடாக இதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கவுள்ளன.

இதன்படி, நாட்டின் அனைத்து மாவட்ட செயலகங்களிலும் மாவட்ட வேலைவாய்ப்பு மையங்களை திணைக்களம் திறக்கவுள்ளது.

வேலைவாய்ப்புகளைத் தேடுபவர்கள் திணைக்களத்திலோ அல்லது www.dome.gov.lk/web/index.php?lang=en என்ற இணையத்தளத்திலோ தம்மை பதிவு செய்து கொள்ள வேண்டும்.

அந்தந்த மாவட்டங்களுக்குள் உள்ள தனியார் துறை வேலைவாய்ப்புகளை நோக்கி அவர்களை வழிநடத்துவது திணைக்களத்தின் கடமையாகும்.

விண்ணப்பதாரர்களின் தகுதிகளை மதிப்பிட்டு, அவர்களின் ஒப்புதலுடன் வேலையை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது. (ம-3)

## 10 பேருக்கு...

பத்துப் பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர்கள் அனைவரும் வவுனியாவில் விமானப் படையினரின் தனிமைப்படுத்தல் முகாமில் இருந்தவர்கள் என்றும் வெளிநாடுகளில் இருந்து அழைத்து வரப்பட்டிருந்த நிலையில் தனிமைப்படுத்தலில் இருந்தவர்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடம் ஆகியவற்றின் கொரோனா ஆய்வுகூடங்களில் பி.சி.ஆர் பரிசோதனைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3,18)

## விபத்...

மாணவியே உயிரிழந்தவராவார்.

குறித்த சிறுமி கடந்த 8ஆம் திகதி பூநகரியிலிருந்து கிளிநொச்சி நோக்கி முச்சக்கர வண்டியில் சென்ற போது கிளிநொச்சி மின்சார சபைக்கு அருகாமையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிப்பருடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் சிறுமி தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## மதமாற்ற...

மின்கம்பங்களில் சட்டவிரோதமாக காட்சிப்படுத்தப்பட்ட மதமாற்றப் பதாகைகள் நேற்று அகற்றப்பட்டன.

குறித்த பதாகைகளை தாமே அகற்றியதாக ருத்திரசேனை என்ற அமைப்பு உரிமை கோரியுள்ளது.

இதேவேளை அண்மைக்காலமாக சில மதமாற்ற அமைப்புகள் சில வாசகங்களை அச்சிட்டு வீதியோரங்களிலுள்ள மின்கம்பங்களில் காட்சிப்படுத்தப்பட்டமை தொடர்பில் பலரும் விசனம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)


அத கோடிபதி
தினம்: வியாழன்
சீட்டிழுப்பு இல: 1107
வர்ணம்: கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 19.11.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 84,937,145
வெற்றி இலக்கங்கள் 17 32 49 58 X
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
தினம்: வியாழன்
சீட்டிழுப்பு இல: 3437
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 19.11.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 32,706,388
வெற்றி இலக்கங்கள் 02 33 52 70 U
2194
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1281
சீட்டிழுப்பு திகதி 19.11.2020
நிறம் பச்சை
தினம் வியாழன்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
E 17 31 34 51
SUPER 500 1 1 9 8

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் 26,50,995/=
வெற்றி இலக்கங்கள் 08 36 37 52
மிதுனம்
திகதி : 19.11.2020
வெற்றி வாரம் : 2988
வர்ணம் : கபிலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,579,000

சுப்பிரி வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 385
திகதி 19.11.2020
வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 48 53 70
விதி எண் 01
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 10,845,060
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 19-11-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2606
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 09 28 37 45
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2020/11/19
சீட்டிழுப்பு இலக்கம் 4311
K 8 7 9 5 2 2
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2020.11.19
சீட்டிழுப்பு இலக்கம் - 348
G 10 18 59 60
ஆங்கில எழுத்து
வெற்றி இலக்கங்கள்

மெகா பவர்
திகதி 19/11/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0678
Z 08 45 59 60 64

DLB 09-9114
AM சங்கானை
NLB N220062

2020 ஆம் ஆண்டு எம்மால் உருவாக்கப்பட்ட வெற்றியாளர்கள்
15.09.2020 ஆம் திகதி மகாஜன ஜாக்பொட் பரிசு 3 கோடி 71 லட்சம் எம்மிடம் வெல்லப்பட்டுள்ளது.
29.02.2020 → ராசி அதிர்ஷ்டம் → 500,000 [ஐந்துலட்சம்]
10.03.2020 → மகாஜனா → 100,000 [ஒரு லட்சம்]
30.08.2020 → கொவிசெத → 100,000 [ஒரு லட்சம்]
08.09.2020 → மகாஜனா → 100,000 [ஒரு லட்சம்]
24.09.2020 → அபிவிருத்தி → 50,000 [ஐம்பதாயிரம்]
13.10.2020 → மகாஜனா → 100,000 [ஒரு லட்சம்]
14.10.2020 → சசிரி → 100,000 [ஒரு லட்சம்]
20.10.2020 → கொவிசெத → 100,000 [ஒரு லட்சம்]
15.11.2020 → கொவிசெத → 100,000 [ஒரு லட்சம்]
16.11.2020 → மகாஜனா → 100,000 [ஒரு லட்சம்]
கோடீஸ்வர ஜாக்பொட் விற்பனை முகவர்: AM.த.சஜீஜன் (C-726) பிரதான வீதி, சங்கானை

## முழு நேர மற்றும் பகுதிநேர வேலை வாய்ப்பு

சர்வதேச நிறுவனம் ஒன்றுக்கு கீழ்க்காணும் பிரதேசங்களிற்கு ஆட்களை இணைத்துக்கொள்ள இருப்பதால் பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்.

கல்வித் தகைமை : **O/L, A/L**
வயதெல்லை : **20 - 45 வரை**
பிரதேசங்கள் : **பளை, சாவகச்சேரி, வடமராட்சி.**

(C-732)

**தொடர்புகளுக்கு : 077 076 0115**

## 44 வருட பாடசாலை வரலாற்றில் முதற் சாதனையாளர்




முல்லைத்தீவு கல்வி வலயத்தில்
**மு/மன்னாகண்டல் அ.த.க. பாடசாலையைச்** சேர்ந்த
செல்வி **மோகனராசா சஞ்சனா** என்னும் மாணவி நடைபெற்று
முடிந்த 2020 ஆம் ஆண்டின் **தரம் 5** புலமைப் பரிசில் பரீட்சையில்
**179** புள்ளிகளைப் பெற்று சாதனை படைத்து எமது பாடசாலைக்கும்
சமூகத்திற்கும் பெற்றோருக்கும் பெருமை தேடித் தந்துள்ளார்.
இம் மாணவியைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(C-723)

வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம்,
ஆனைக்கோட்டை, நவாலி வீதி
மெயின் றோட்டுடன் 4 1/2
பரப்புக் காணி விற்பனைக்கு
உள்ளது.
**1 1/2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.**
**(தரகர் தேவையில்லை.)**
( ஆனைக்கோட்டைச் சந்தியில்
இருந்து 70 மீற்றர் தூரம்.)

(4693)

**077 623 4204,**
**077 288 0152**

## தரம் 6 - 2021

2021 இல் ஆங்கில மொழி மூலம்
கற்க இருப்பவர்களுக்கான

**அடிப்படைக் கணிதம்**
&
**ENGLISH**
- Writing
- Speaking
- Reading
- Listening

( மிக அடிப்படையிலிருந்து )
மிக விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

By **P.T. KUMARAN**
**( P.MATHAN )**

**NEWTON GROUP CLASSES**
18/18, Wyman Road, Nallur.
Viber, T.P / SMS, WhatsApp
**077 792 3653**
என்னும் இலக்கத்திற்கு மாணவர்கள்
பெயர் மற்றும் முகவரியை அனுப்பி
பதிவு செய்து கௌ்ளவும்.

(4687)

## காணிகள் தேவை

யாழ்ப்பாணம்,
கோப்பாய், நல்லூர்
பிரதேச செயலக
எல்லைகளுக்குள்
20 பரப்பு தொடக்கம்
50 பரப்பு வரையான
காணி தேவை.
( தரகர் தேவையில்லை. )

(4692)

**076 221 2037**

## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப்
போகின்ற அனைத்து விடயங்களையும்
மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.

(4684)

தொடர்பு: 076 835 1932,
021 223 2222 (உரும்பிராய்)

## சிறுநீரகம் தேவை

B,O இரத்த
வகையைச் சேர்ந்த
சிறுநீரகம் தேவை.

தொடர்பு (4691)
**076 239 9874**

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
UK- 1025 /= Kg
0768226240

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

(C-505)


## மரண அறிவித்தல்



பிறப்பு 15 – 11 – 1935

இறப்பு 19 – 11 – 2020

# வல்லி சின்னத்தம்பி

**(ஓய்வுநிலை உப அதிபர் - தும்பளை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம், உப தலைவர் - உடுப்பிட்டி ப.நோ. கூ. ச., உப தலைவர்- புலோலி ப. நோ.கூ.ச.)**

கரணவாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வராத்துப்பளை, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லி சின்னத்தம்பி (ஓய்வுநிலை உப அதிபர் - தும்பளை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம், உப தலைவர் - உடுப்பிட்டி ப.நோ. கூ. ச., உப தலைவர்- புலோலி ப.நோ.கூ.ச.) நேற்று (19.11.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகாம்பிகையின் அன்புக் கணவரும் ஜீவமுரளி, ஜீவபிரபாகரன், ஜீவமுகுந்தன், ஜீவராகுலன், ஜீவதுளசி, அஜிதா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் உமாசாணிகா, பத்மகௌரி, றெஜினி, யோகநாதன், செல்வக்கடுங்கோ ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2020) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் பகல் 1.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


(C-733)

எழில் இல்லம்,
வராத்துப்பளை. பருத்தித்துறை.

077 667 7251

தகவல்:-
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



பிறப்பு 14 – 12 – 1933

இறப்பு 19 – 11 – 2020

# கணேசபிள்ளை தாமோதரம்பிள்ளை

ஊரிக்காடு, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கொண்டைக்கட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கணேசபிள்ளை தாமோதரம்பிள்ளை நேற்று (19.11.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானாம்பிகையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வைகுந்தநாதன், கனகாம்புஜம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஜமுனா, தனஞ்சயன், சுனிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவகுமார், ஸ்ரீதர், ராஜி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சந்தோஷ், சயூன், விதுஷா, நிவாஷினி, வினோகாந், அனுசியா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2020) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணியளவில் ஊரணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-734)

கொண்டைக்கட்டை,
வல்வெட்டித்துறை.

தகவல்:-
மகள் : ஜமுனா - 647741625 (கனடா)
மகன் : தனஞ்சயன் - 6475471803 (கனடா)
மகள் : சுனிதா - 447506550912 (லண்டன்)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.